செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை

சிலம்பு-௫௧] வள்ளுவர் ஆண்டு ௨௦௦௮ மாசி (Mar'77) [பரல்-௭

‘செந்தமிழ்ச் செல்வி’

‘‘செந்தமிழ்ச் செல்வி’’

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

உறுப்பினர் கட்டணக் குறிப்பு:

ஆண்டுக் கையொப்பம்

உள்நாடு 12 00 வெளிநாடு 20 00

ஆயுள் கையொப்பம்

உள்நாடு ரூ. 120 00 வெளிநாடு ரூ. 200 00

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௫௧	திருவள்ளுவர் ஆண்டு ௨௦௦௮, மாசி மார்ச்சு 1977	பரல் ௭

நூற்பதிப்புத் துறைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி

செந்தமிழ்ச் செல்வி 49 ஆம் சிலம்பு 4 ஆவது பரலில் 'நூற் பதிப்பகங்கள் மடிவதேன்?' என்னுந் தலைப்பில் எழுதப்பெற்ற தலைப்புக் கட்டுரையின் தொடர்பாக இக் கட்டுரை ஈண்டு எழுதப் பெறுகின்றது.

நூலாசிரியர், நூற்பதிப்பாளர், நூல் விற்பனையாளர், அச்சுக் கூடத்தினர், தாள் வணிகர், மை வணிகர், ஓவியர், அச்சுப்படக்கட்டை செய்வோர் முதலிய பலரும் நூற்பதிப்புத் துறையோடு தொடர்புடையவர்களாவர் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

1968 ஆம் ஆண்டு முதல் 73 வரை தாள், மை ஆகியவற்றின் விலை, அச்செழுத்து வார்ப்புக் கூலி முதலியன படிப்படியே உயர்ந்து வந்தன. 1973 ஆம் ஆண்டுக்குப் பின்னே இவையெல்லாம் மும்மடங்கு விலையேறிவிட்டன. எனவே 1968 இல் ஒரு ரூபா விற்பனை விலை வைக்கப்பெற்ற நூலுக்கு இப்போது நான்கு ரூபா விலை வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எடுத்துக் காட்டாக ஒன்றை இங்குக் காண்போம்.

சென்னைப் பல்கலைக் கழக ஆங்கிலத் தமிழ் அகரமுதலி 1965 இல் மூன்று பகுதிகளாக அச்சிடப்பட்டு ஒவ்வொரு பகுதிக்கும் ரூ. 7-50 ஆக விலை வைத்து விற்பனை செய்யப்பெற்றது. அவற்றில் முதற்பகுதி மட்டும் விற்றுத் தீர்ந்தமையால் அண்மையில் அச்சிடப்பட்ட அப் பகுதிக்கு மட்டும் ரூ. 30 விலை வைக்கப் பட்டுள்ளது. அஃது உண்மையான நேர்மையான விலை என்று

நாம் ஒப்புக்கொள்ளக் கூடியதேயாகும். புத்தகத்தின் விலை இவ்வாறு உயர்ந்துள்ளமையினால் அதனை விற்பதற்கு எவ்வளவு இடர்ப்பாடு ஏற்படுகின்றது என்பது அறிதற்பாலது. இம் முறையில் புத்தகம் அச்சிடுவோர் தத்தம் புத்தகங்கட்கு விற்பனை விலை குறிப்பிட வேண்டியது முறையாகு மன்றோ ?

இனி, புத்தகத்திற்குரிய கழிவு (கமிஷன்)பற்றிப் பார்ப்போம். சென்னைப் பல்கலைக் கழகத்தினர் தம் நூல்களுக்கு 100க்கு 15 விழுக்காடும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினர் 25-ம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் 20-ம், சில தனிப்பட்ட நூல் விற்பனையாளர்கள் 20, 25, 30-ம் கழிவாகத் தருகின்றனர். தமிழ்நாடு அரசு பாடநூல் நிறுவனத்தினர் பாடநூல் அல்லாதவற்றுக்கு முன்பு 25% கழிவு கொடுத்து வந்ததைப் பின்னர் 20% ஆகக் குறைத்துவிட்டனர். மறைமலையடிகள் தாம் வாழ்ந்த காலத்தில் தம் நூல்கட்கு வணிகர்கட்கு மட்டுமே $12\frac{1}{2}$% கழிவு கொடுத்துவந்தனர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

பொதுவாக ஆக்கப்படும் மக்கட்குத் தேவையுள்ள பல் வகைப் பொருள்களுக்கு வணிகர்கட்குமட்டுமே கழிவு கொடுப்பது வழக்கமாக உள்ளது. அதனால் அதற்கு 'Trade Discount' என்ற பொதுச் சொல்லே வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால் புத்தகங்களுக்கோ வணிகர்களுக்கு மட்டுமன்றிப் படிப்போர்க்கும், நூல்நிலையங்கள், கல்வி நிறுவனங்கள் முதலியவற்றுக்கும் கழிவு கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

சில அரசு நிறுவனங்கள் தமக்கு வேண்டிய புத்தகங்களுக்கு விலைப்புள்ளி (Tender) பெற்று எவர் கூடுதலான கழிவு தருகின்றனரோ அவரிடம் புத்தகங்களை வாங்குகின்றன. இம் முறை இப்போது புதுவை அரசினால் கடைப்பிடிக்கப்படுகின்றது. இங்ஙனம் விலைப்புள்ளி பெற்று வாங்குவதனால் பதிப்பாளர்களிற் சிலர் தாமே கட்டளை பெறவேண்டிக் கூடுதல் கழிவு தருதற்கு ஒப்புதல் அளித்துவிட்டுத் தம்முடைய பதிப்பு நூல்களை மிகுதியாகவும் பிறபதிப்பாளர் வெளியீடுகளைக் குறைவாகவும் வாங்கி வழங்கிவிட்டுப் பிற பதிப்பாளர்களின் பெரும்பாலான நூல்கள் இப்போது கிடைக்கப்பெறவில்லையென்று அறிவித்து விடுகின்றனர்.

கல்கத்தா இராசாராம் மோகன்ராய் அறநிதி நிறுவனம் (RajaRam MohanRoy Foundation) ஆண்டுதோறும் பல மொழிகளில் வெளிவரும் நூல்களை வாங்கி அவ்வம் மொழி வழங்கும் மாநிலங்கட்கு விலையின்றி அனுப்பி வருகின்றது. அப்படி

வாங்கப்பெறும் நூல்களைச் செலவின்றி 20% கழிவுடன் தம்மிடஞ் சேர்ப்பித்தல் வேண்டுமென்று கட்டளையிற் குறிக்கப்பெறுகின்றதாம். அம் முறையில் ஓராண்டுக்குமுன் சென்னையிலுள்ள ஒரு பெரிய புத்தக விற்பனை நிலையத்தார் கழக நூல்களை வாங்கினர். ஆனால், அறநிதி நிறுவனத்துக் கென்பது கருதிக் கழகம் அப்போது தான் வழக்கமாகக் கொடுத்து வரும் 20% கழிவுடன் அனுப்புஞ் செலவுக்கும் வாங்கி யனுப்புபவர்க்குமாக 10% கூடுதல் கழிவு மட்டும் கொடுத்தது. மேற்படி அறநிதி நிறுவனத்திற்கும் இங்கேயுள்ள பெரிய புத்தக விற்பனை நிலையத்திற்கும் இடையில் கட்டளை பெற்றுத்தந்த தரகர் ஒருவரால் அந் நிலையத்திற்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்வாண்டில் அந் நிலையத்தார் கழகப் புத்தகங்களில் ஒன்றைக் குறிப்பிட்டு அதற்கு 40% கழிவு வேண்டும் என்றனர். அப்படி வந்து வேண்டியவர் அறநிதி நிறுவனத்தார்க்கு 20% கழிவு தருதல் வேண்டும் என்றும், அனுப்புஞ் செலவு உட்படத் தமக்கு 20% கூடுதல் கழிவு தருதல் வேண்டும் என்றும் கேட்டனர். அது முடியாதென்று மறுத்துவிட்டோம். இத் தகாத முறைகளினுலெல்லாம் நூற்பதிப்புத் துறைக்கு நேர்ந்துள்ள இடர்ப்பாடு அறியக்கிடக்கின்றது.

பதிப்பாளரால் வெளியிடப்பெறும் நூல்கள் யாவும் யாண்டும் கிடைக்கப்பெறும் வகையில் தமிழ்நாட்டில் பற்பல பெரிய ஊர்களில் புத்தக விற்பனையாளர்கள் இருத்தல் வேண்டும். அவர்கட்குமட்டுமே புத்தகப் பதிப்பாளர்கள் வணிகக் கழிவு கொடுக்க வேண்டியது முறையாகும். நாள், கிழமை, திங்கள், முத்திங்கள் முதலிய இதழ்களை வாங்கி விற்கும் விற்பனையாளர்கட்கு மட்டுமே விற்பனைக் கழிவு கொடுக்கப்பெறுகின்றது. அவற்றை வாங்கிப் படிப்பவர்கட்குக் கழிவு கொடுக்கப்படுவதில்லை. அதேபோல் நூற்பதிப்பாளர்கள் புத்தக விற்பனையாளர்கட்கு மட்டுமே வணிகக் கழிவு கொடுப்பதாயின் புத்தகங்கள் யாவும் யாண்டும் படிப்பவர்கட்கு எளிதிலே கிடைக்கப்பெறும். புத்தகப் பதிப்பாளர்கள், அலைந்து திரிந்து தம் நூல்களை விற்பதற்குத் துன்புற வேண்டியதில்லை. மேலே கூறியவற்றை அரசு சிந்தித்துச் செயலாற்றின் நன்மையுண்டாகும்.

பொது நூலகங்கள் பல சென்னை மாநகரிலும் மற்றும் மாவட்டங்களிலும் நிறுவப்பட்டு அவ்வமைப்பு தனித் துறையாக இயங்கி வருகின்றது. அத்துறையில் பொறுப்பாளராக உள்ள ஒருவரால் பதிப்பாளர்கள் வழக்கமாகக் கொடுக்கும் கழிவை

விட அதிகப்படியான கழிவு 25% கொடுக்குமாறு வற்புறுத்தப் பெறுகின்றனர். தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரகம் ஆண்டு தோறும் உயர் பள்ளிகட்கும், தொடக்கப் பள்ளிகட்கும் சில நூல்களை வாங்கியனுப்புவதுண்டு. 1974-75 வரை கழகம் 20% கழிவே கொடுத்துவந்தது. ஆனல் 1975-76 முதல் பொது நூலக இயக்குநர் ஏற்படுத்திய 25% கழிவே கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தரமற்ற நூல்களை வெளியிடுவோர் அங்ஙனம் கொடுத்தால் இழப்பில்லை. ஆனல் கழகம் போன்ற நிறுவனங்கள் இருபது விழுக்காடுகட்குமேல் கழிவு தருதற்கு இயலாமையால் நூல் விற்பனை குறைகின்றது.

பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களையும், மற்றும் சமயம் அறிவியல் தொழிலியல் முதலிய பல்துறை நூல்களையும் செம்மையாக அச்சிட்டுத் தட்டுப்பாடு இன்றி எங்கும் கிடைக்கச் செய்தல் வேண்டும் என்பதே கழகத்தின் அடிப்படை நோக்க மாகும். அவ்வகையில் இதுகாறும் 1650க்கு மேற்பட்ட நூல் களை வெளியிட்டுள்ளது. நூல்கள் ஆங்காங்குக் கிடைக்கும் பொருட்டு ஐந்து பெருநகரங்களில் விற்பனைக் கிளை நிலையங்களை நிறுவியுள்ளது; மேலும் நிறுவவும் திட்டமிட்டுள்ளது. கழக நிலையங்களில் கழக நூல்களொடு, பிற பதிப்பாளர்தம் நூல் களும், தனியார் வெளியீடுகளும் விற்பனைக்குக் கிடைக்கும்படி செய்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

அரிய நூல்கள் பலவும் ஆராய்ச்சியாளர்க்கும், பொது மக்களுக்கும் பயன்படும் வகையில் கழகம் சென்னையில் மறைமலை யடிகள் நூல் நிலையத்தையும், திருநெல்வேலியில் சிவஞான முனிவர் நூல் நிலையத்தையும், சென்னையை அடுத்த பல்லாவரத்தில் உள்ள மறைமலையடிகள் கலைமன்றத்தில் ஒரு நூல் நிலையத்தையும் நிறுவி அவற்றை யாவரும் பாராட்டும் வண்ணம் செம்மையாக நடத்தி வருகின்றது.

கழகம் கூட்டுப்பங்கு நிறுவனமாதலால் பணியாளர்கட்கு விடுமுறைத்திட்டம், உழைப்பூதியத்திட்டம், விருப்பூதியத் திட்டம் முதலியவற்றை நிறைவேற்றவேண்டிய கடப்பாடுடைய தாக உள்ளது. தனிப்பட்ட புத்தக விற்பனையாளர்கள் போல விருப்பப்படியெல்லாம் இயங்க முடியாத கட்டுப்பாடுகள் கழகத் திற்கு உள்ளன.

(தொடரும்)

சிவஞானபோத ஆராய்ச்சி

[அருட்டிரு அழகரடிகள்]

(சிலம்பு ருக, பரல் ௬, பக்கம் ௬௧௦இன் தொடர்ச்சி)

சிவஞானபோதத்தின் இரண்டாம் நூற்பா,

"அவையே தானே யாய்இரு வினையின்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும், அன்றே"

என்பது.

நூற்பாத் தொடர்பு:

முதல் நூற்பா, கடவுள் உண்மை கூறுவது. இரண்டாம் நூற்பா, மலங்களின் இருப்புக் கூறுவது. மூன்றும் நூற்பா, உயிர்கள் இருக்கின்றன என்பதுணர்த்துவது. இந்த மூன்று நூற்பாக்களும், முறையே, பதி, பாசம், பசு என்பவற்றின் உண்மை (பிரமாணம்) குறிப்பன. இதனுல் நூற்பாக்களின் தொடர்பு உணரப்படுகின்றது.

'கடவுளிடத்திலிருந்து உலகம் திரும்பவும் உண்டாகின்றது' என்று முதல் நூற்பாவில் வருவதனுல், 'உலகம் எவ்வாறு உண்டாகின்றது' என்று யாரும் அவாவி நிற்பர்; அதனை இரண்டாம் நூற்பா வகுத்துக் கூறுகின்றது. அதனுல், மலங்களின் உண்மையையும் கூற நேர்கின்றது. பிறவியின் வேறுபாட்டுக்குக் காரணம் முதன்மையாய் வினை; ஆதலால், மலங்களிலும் கன்மத்தை முதன்மையாக எடுத்து இந் நூற்பா விளக்கும்.

கன்மம் விளைவது மாயையின் சேர்க்கையால், ஆதலால் மாயையின் இருப்பும் தெளியப்படும். மாயையும் கன்மமும் இடையில் எழுவன. இவற்றிற்குக் காரணமாயிருக்கும் ஆணவ மலத்தின் உண்மையும் இதனுல் உணரப்படுகின்றது.

முதல் நூற்பாவினுல் மும்மலங்களின் உண்மை தெளியப்பட்டாலும், அங்கே ஆணவமலத்தின் முதன்மை உணரப்பட்டது. இங்கே இருவினையின் முதன்மை தெளிவிக்கப்படுகிறது. கன்மத்துக்குப் பற்றுக்கோடாயிருக்கும் மாயை மலத்தின் உண்மையும் இருவினையைக் கொண்டு தெளியப்படும்.

இரண்டாம் நூற்பா, 'உலகம் திரும்பவும் உண்டாவது எவ்வாறு' என்னும் அவா உணர்வுக்கு வினையினுல் உலகமும் பிறவிகளும் மீளவும் தோன்றுகின்றன என்றும், அவை தோன்றுதற்குச் 'சிவசத்தி'யும் ஒரு காரணம் என்றும், பிறவியை வினைக்கேற்ப உண்டாக்கும் பொருட்டு வினைகளைச் 'சிவசத்தி' இயக்குகிறது என்றும், 'சிவசத்தி'யின் செய்கைகளுக்குச் சிவம் இணங்கிச் செயல் கொள்வன்' என்றும், காரணங்கள் உணர்த்தப்படுகின்றன. கடவுள், உயிர்களிலும் கலந்து மலங்களிலும் கலந்து இயக்குவதனுல், அவ்வாறு திரும்பவும் உலகம் உண்டாகின்றது.

கடவுள் நிமித்த காரணம்; முதற்காரணம் மாயை; துணைக் காரணங்களும் செயலுக்கு வேண்டப்படும். இறைவனுடைய 'சத்தி' ஒரு துணைக் காரணம். உயிர்கள் செய்யும் இருவினைகளுக்கு ஏற்றபடியே பிறவிகளை இறைவன் உண்டாக்குவது இயற்கையாய் இருப்பதனுல், வினைகளும் துணைக் காரணமாகும். இவ்வாற்ருல் நிமித்த காரணம் துணைக்காரணம், முதற்காரணம் எனக் காரணங்கள் மூன்றும் பெறப்படும்.

உயிர்களின் பொருட்டே உலகங்கள் உண்டாவதனுல் கடவுளின் கலப்பு உயிர்களிடத்திலும் மலங்கள் என்பவற்றிலும் இயைபுறுகின்றன. அவற்றையெல்லாம் இயக்க உதவும் 'அம்மை'யிலும் இயைபுறுகின்றது. ஆகக் கடவுட் கலப்பு, 'அம்மை' 'உயிர்' 'மலம்' என்னும் மூன்றிலும் இயைபுறுகின்றது என்று தெளிந்து கொள்ளலாம்.

இப்படி இயைபுறுவதனுலேயே 'அம்மை'யும் 'வினை'யுமாகிய துணைக் காரணங்களும் 'மாயை' என்னும் முதற்காரணமும் இயங்குகின்றன. இயங்கி, உலகம் உடல் முதலிய தோற்றங்களுக்குக் காரணமாகின்றன. கடவுட் கலப்பு கலக்காவிட்டால், இயக்கமும் தோற்றமும் இல்லை.

ஒரு தொழிலைச் செய்வோர், முதலில் தம் 'வல்லமை'யின் இயல்பையும், அதன்பின் மூலப்பொருளின் குணங்களையும், கருவிகளின் தன்மைகளையும், தொழிலாளிகளின் பண்புகளையும், அறிந்திருக்க வேண்டும். பின்பு, அவற்ருேடு இரண்டறப் பழகுதல் வேண்டும் ; அந் நிலையிலேதான், தொழில்களை அவர் நன்ருகச் செய்ய முடியும்.

கலந்து பழகுதல் என்ருல், தம் முதன்மையும் அதனுற் கெட்டுவிடாமற், கடந்து வேறுபட்டிருக்க வேண்டும். தலைவராய் இருப்பவர்க்கு இச் சிறப்புகள் முதன்மையாகும்.

இரண்டற்ற கலப்பு :

இத்தகைய கலப்பினைத்தான் 'இரண்டற்ற தன்மை' அல்லது 'அத்துவிதம்' என்று பெரியோர் சொல்லி வந்தனர்; வருகின்றனர்.

இரண்டற்ற கலப்பு என்பது, 'ஒன்ருய்' 'வேருய்' 'உடனுய்' கலத்தலாகும்.

மலங்கள் ஆணவமலம், மாயைமலம், கன்மமலம் என்று மூவகைப்படும். உயிர்கள் ஆண், பெண் என்று இருவகைப் படும். கடவுள் ஒருவரே.

கடவுள், 'அம்மையோடு' கலப்பது எனவும், உயிர்களோடு கலப்பது எனவும், மலங்களோடு கலப்பது எனவும் மூன்று வகையில் நிகழும். 'அம்மை'யோடு கலப்பது 'மிகு நுட்ப' மானது. உயிர்களோடு கலப்பது 'நுட்ப'மானது, மலங்க ளோடு கலப்பது 'பரும'ஞனது. ஒவ்வொன்றிலும் அவ் வகைக் கலப்பு ஒன்ருயும் வேருயும் உடனுயும் நிகழ்கிறது.

இவ்வாறெல்லாம் இறைவன் எல்லாவற்ருேடும் இரண் டற்ற முறையிற் கலந்து நிற்பதற்குக் காரணம், அப் பெருமான் முழுப் பரவல் (சர்வவியாபகத்) தன்மையுடன் இருத்தலும், அவை எல்லாவற்றிற்கும் வேறுபட்டிருத்தலும், எல்லாவற்றை யும் இயக்கக்கூடிய தலைவனு யிருத்தலுமாகும்.

'அம்மை'யில் சிவத்தின் கலப்பு 'மிகுநுட்ப'மானதனுல் அதனைப் 'பளிங்கில் பொருள் கலப்பதுபோல' என்று சொல்ல லாம். உயிர்களில் இறைவன் கலத்தலை 'நீரின் நிழல் கலத்தல் போல' என்பது பொருந்தும். மலங்களிற் கலத்தலை 'மண்ணில் ஈரம் கலத்தல்போல' என்று விளக்கிக் கொள்ளலாம். இப்படி அவன் கலக்காவிட்டால், இயக்கம் என்பது எங்கும் நிகழாது. 'மாறுதல்' 'உருவாதல்' 'திரிதல்' முதலியனவும் நிகழ்வதற்கு வாய்ப்பில்லை. அதனுலேயே 'அவனன்றி ஒரணுவும் அசையாது' என்று பெரியோர் தெரிவிக்கின்றனர்.

கடவுளை ஆடல் பெருமானுக (அம்பலவாணராக) அசையும் பெருமான் என்னுங் கருத்தில், பெரியோர் போற்றுகின்றனர். கடவுள் இவ்வாறு அசைவதனுல் கலைகள் தோன்றுகின்றன. பின்பு, பொருள்களின் உருவங்களும் தோற்றுகின்றன. அதனுல், அம்பலவாணரைக் கலைக் கருவூலமாகவும், திரு வுருவப் பெருமானுகவும் அறிஞர் வகைப்படுத்தி வந்தனர்.

பற்றற்ற நிலையில் தெய்வப்பண்பு பொருந்தி இவ்வாறு கலைகளும் உருவங்களும் தோற்றுதலால், அப் பற்றற்ற வெளி

யின் தெய்வநிலையே 'அம்பலவாணர்' என்பது; பற்றற்ற நிலைக்கு 'வெளி' என்று பெயர். வெளிபோல வரம்பற்ற நிலையில் விளங்குதலால் அவ்வாறு சொல்வது வழக்கமாயிற்று. 'அம்பலம்' என்பது வெளி; ஞானவெளி; (சித் அம்பரம், சிதம்பரம்; 'சித்' என்பது ஞானம்;) அம்பலவாணர் அத்தகைய ஞானவெளியில் வாழ்கிறவர்! ஞான வெளியைச் சிற்றம்பலம் என்று சொல்லுவர். சிறு அம்பலம், சிற்றம்பலம்; நுண்ணிய அம்பலம் என்பது பொருள். சிறுமை இங்ஙனம் நுட்பப் பொருளில் வருதலைச் 'சில்' என்பதற்குப் பேராசிரியர் 'நுண்ணிய' என்று பொருள் உரைத்ததனால் அறிந்து கொள்ளலாம் (திருக்கோவையார், ௧௬௬)

உலகப் பொருள்களில் நுட்பமானதும் ஆற்றல் வாய்ந்ததும் 'மின்' எனப்படும். தூலமாகிய அம் மின்னுக்கு நுட்பமான மின் உட்கருவிகள்; அக் கருவிகளுக்கு அப்பாற்பட்ட (மாயை கடந்த) மிகு நுட்பமான மின் 'அருள்மின்' எனப்படும்.

மின் சேர்ந்தால் ஒளி உண்டாகும்; ஒலி உண்டாகும்; இயக்கமும் உண்டாகும். எல்லாவற்றோடும் உயிர்களோடும் அந்த அருள்மின் கலந்திருப்பதனால், கலப்பின் தரத்துக்குத் தக்கபடி, எல்லாம் இயங்குகின்றன; பிறவியும் மீள உண்டாகின்றது.

கடவுட் கலப்பு, எல்லாவற்றோடும் இரண்டற்ற தன்மையில் அமைவதனால், அக் கலந்த நிலையில், எதனையும் ஒன்று என்றோ இரண்டு என்றோ சொல்லமுடியாமல் 'இரண்டற்ற நிலை'யில் உள்ளது என்று சொல்லவேண்டி யிருக்கிறது. இரண்டற்ற நிலை என்று சொல்லும்போது, பொருள்கள் இரண்டு என்பதும், கலப்பில் அவை இரண்டல்லாதபடி கலக்கின்றன என்பதும் விளங்குகின்றன.

பாலில் நீர் கலந்தபின், அவற்றைப் 'பால்' என்று ஒரு பொருளாகத்தான் சொல்லுகிறோம். ஆனால், அதனிற் 'பால்' என்னும் ஒன்றும் 'நீர்' என்னும் ஒன்றுமாக இரண்டு பொருள்கள் இருப்பதை எல்லாரும் அறிவார்கள். இப்படித்தான் கடவுளும் மற்றவையும் கலந்துள்ளன. மற்றவை என்பது, அம்மை, உயிர், மலம்; பாலில் வெண்ணெய் வேறு கலந்து இருப்பதும் எல்லார்க்கும் தெரியும். 'வெண்ணெய், பால், நீர்' என்ற மூன்று பொருள்கள் ஒன்றாய்க் கலந்து, 'பால்' என ஒரு பெயரால் ஒரு பொருளாய் வழங்குகின்றன. இவற்றில், 'வெண்ணெய்' என்பது கடவுள், 'பால்' என்பது உயிர்; 'நீர்' என்பது மலம். இம் மூன்று பொருள்களின் கலவையில் ஒருண்மை

நமக்கு நன்ருய் விளங்குகிறது. நீர் கலந்தாலும் பாலிற் கலந்துவிட்டதாகக் கூறுகிரேம். வெண்ணெய் கலந்தாலும், பாலிற் கலந்ததாகக் கூறுகிரேம். ஆதலால், மலக்கலப்பும் கடவுட் கலப்பும் உயிரில் என்பதுதான் முக்கியம்.

இறைவன் எங்கும் பொருந்தினவனுதலால் மலங்களிலும் பொதுவாகக் கலந்திருப்பான் என்கின்ரேம். ஆனுல், உயிர் களிலேதான் சிறப்பாய்க் கலந்திருப்பான் என்று இதனுல் தெரிந்துகொள்ளலாம். இறைவன் மிகு நுட்பமானவனுதலின், உயிரின் நுட்ப நிலைகளாகிய உயிரறிவு அன்புகளில் நன்கு கலந்திருக்கிருன்; ''அறிவினில் அருளால் மன்னி'' என்பது சித்தியார்.

நீரின் தொடர்பால் பாலின் சுவை குறைகிறது; 'வெண் ணெயின் தொடர்பால் பாலின் மதிப்பு மிகுகிறது. அதுபோல, உயிர்களிற் கடவுட் கலப்பு மிகுதியானுல் மதிப்பு மிகும். நீர்க் கலப்பு போல்வதாகிய மலக்கலப்பு மிகுதியானுல், உயிரின் தரம் குறையும்.

பாலும், நீரும், வெண்ணெயும் சேர்ந்து ஒரு பொருள் போல் பாலாகத் தோற்றமுறுகிறது. அதுபோல, உயிரும் மலமும் கடவுளும் ஒன்று சேர்ந்து நமக்கு உலகமாய் விளங்கு கின்றது. உலகத்தில் இம் முப்பொருளின் இருப்பையும் கலப் பையும் உணர்ந்து, ஒவ்வொன்றின் இயல்பையும் செயலையும் தெரிந்து, மற்ற இரண்டிலும் பற்றற்று, இறைவனேடு மட்டும் அன்பினுல் ஒன்றுதல் வேண்டும். அப்படி அப் பெருமானேடு ஒன்றுதலும் 'இரண்டற்ற' கலப்பில் அமையும். ஏனென்ருல், நுண்ணிய பொருள்களின் கலப்பெல்லாம், 'இரண்டற்ற தன்மை யிலே'தான் கலக்கும்.

ஒன்ருய் வேருய் உடனுய்:

இனி ஒன்ருயிருக்கும் பொருளை 'ஒன்று' என்றுதான் சொல்ல வேண்டும்; ஆனுல் 'கலப்பு என்ருலே, தன்மையில் வேறுபட்ட இருபொருள்கள் அங்கே புலப்படுகின்றன. ஆதலால் இறைவன் 'வேருய்' எனப்பட்டான், ஏதோ ஒரு நோக்கங் காரணமாக இரண்டும் கூடியிருப்பதனுல், உடனுய் என்றும் பெரியோர் கூறுவர், நோக்கமில்லையானுல், கூடியும் பயனில்லை.

நமக்குத் தெரியும் நண்பர் ஒருவரைப் பார்க்கும்போது அந் நண்பரின் உடல் வேருகவும், உயிர் வேருகவும், தனித்தனியாக இல்லை. இரண்டும் ஒன்ருய்ச் சேர்ந்து ஒரு பொருளாய்க்

காணப்படுகின்றன. இப்படிக் கலந்திருப்பதை ஒரு பொருள் என்று வழங்குதலும் பொருந்துந்தான்! 'ஒன்ருய்' என்று சொல்லும் வழக்கம் ஏற்பட்டதன் கருத்து இது!

சற்று உற்று நோக்கினுல், உயிரின் 'பொருள் தன்மை' வேறு, உடலின் 'பொருள் தன்மை' வேறு என்று தெரியும்; இதனுல், 'வேருய்' என்பதும் பொருந்துகிறது;

செயல் நோக்கத்தோடு கூடியிருப்பதனுல், 'உடனுய்' எனவும் உரைக்கலாம்.

இரு பொருள்கள் இங்ஙனம் மூவகையாய்க் கலந்திருக்கின்றன. ஆயினும் உடலும் உயிரும் ஒன்ருய்க் கலந்திருத்தலே எடுத்துத் தெரிவதனுலும் வெளிப்படையாய்த் தெரிவதனுலும் 'ஒன்ருய்' என்னும் வழக்குக்கு 'உடலுயிர்போல்' என்னும் உவமையை முன்னோர் கையாண்டு வந்தனர். அங்ஙனம் இறைவன் மற்றவற்றில் 'உடலுயிர்போல்' ஒன்ருய்க் கலந்திருக்கிருன்.

இனி, இருபொருளும் வேறுபட்ட தன்மைக்குச் சூரிய ஒளியும் கண்ணொளியும் கலந்திருப்பதைக் கூறுவதுண்டு. இரண்டின் ஒளியும் ஒன்றென்னும்படி கலந்திருந்தாலும் சூரிய ஒளி வேறு, கண்ணொளி வேறு என்பதையும், சூரியனும் கண்ணும் இருவேறு பொருள்கள் என்பதையும், அனைவரும் அறிவர். சூரிய ஒளியில் கண்ணொளி அடங்கி இயைந்திருக்கிறது. அதனுல் முதன்மை சூரியனுக்கே ஆகும். சூரியன் ஒன்று; கடவுளும் ஒருவர்; கண்கள் பல, உயிர்களும் பலப்பல; கண்களுக்கும் ஒளி கொடுத்துப் பண்டங்களையும் காட்டிக்கொண்டிருக்கும் இருவகைப் பெருமை சூரியனுக்கு இருக்கிறது. அதுபோல, உயிர்களின் அறிவையும் விளக்கிக்கொண்டு உலகப் பண்டங்களிலும் ஒளி வீசி உயிர்களுக்குப் பயன்படும்படி பக்குவம் செய்து கொண்டிருக்கிருன் இறைவன்; தன்மையால் நோக்கும்போது கடவுள்தன்மை உயிர்களின் தன்மைக்கு வேருய் இருக்கிறது. அருக்கன் ஒளி, கண்ணொளிகளின் இயல்புக்கு வேறுபட்டது. அதனுல் 'வேருய்' என்பதற்கு இவ்வுவமை எடுத்துக்காட்டானது.

இனி உடனுய் என்பதற்கு எடுத்துக்காட்டுக், கண்ணறிவோடு ஆன்ம அறிவு கலந்திருக்கும் நிலையாகும். இவையிரண்டும் ஒன்ருய்க் கலந்திருந்தாலும் வேருய் விளங்கியிருந்தாலும், செயலில் உடனுய் ஒன்றியிருப்பது சிறப்பாய்த் தெரிகிறது. செயல் நோக்கோடு கூடிய அவ்வகைக் கலப்புக்கு இந்த எடுத்துக்காட்டு ஏற்றதாய் இருக்கிறது.

ஆதலால், 'உடல் உயிர் ஒன்று கூடியிருப்பதுபோல்' ஒன்ருயும், 'கண்ணெளியும் அருக்கன் ஒளியும்' அவ்வாறு ஒன்று கூடியிருந்தாலும் சூரியன் வேறுபட்ட தன்மையுடையவனுய்ச் சிறந்திருப்பது தொலைவு காரணமாக நன்கு தெரிவதனுல் வேருயும், 'கண்ணறிவும் ஆன்ம அறிவும்' ஒன்று கூடி வேருகவும் விளங்கியிருப்பது போல உயிரின் திறம் ஒன்ருய் வேருய்ச் சிறந்திருந்தாலும், உடனுய் இருந்து, பார்த்தல் காரியத்தைச் செய்வதனுல் 'உடனுயும்' கலந்திருப்பதற்கு, இவ்வுமைகள் பொருந்தியிருக்கின்றன. இறைவனும் எல்லாவற்ருேடும் இங்ஙனம் 'உடலுயிர்போல்' ஒன்ருயும், 'கண் அருக்கன்போல்' வேருயும் 'கண்ணொளி உயிரறிவு போல்' உடனுயுங் கலந்து, காரியங்களைச் செய்து வருகிருன்.

ஒன்ருய் இருப்பதைவிட வேருய் இருப்பதைவிட, உடனுய் இருப்பதென்பது பொருள்கள் இயங்குவதற்கு ஏற்றது. உடனுய் இருக்கும் இக் கலப்புப்போலக் காரியங்களில் துணை செய்யும் கலப்பு, வேறு இல்லை. கண்ணறிவோடு ஆன்ம அறிவு அவ்வாறு உடனுய் ஒரு நோக்கமாய் இருத்தலால் கண்ணறிவு எல்லாம் பொருள்களையும் கண்டுவருகிறது ஆதலால் காரியச் சிறப்புக்கு 'உடனுய்' என்னும் கலப்பு இன்றியமையாதது.

'ஒன்ருய்' இருப்பது எளிமை காரணத்தால், 'வேருய்' இருப்பது அருமை காரணத்தால்; உடனுயிருப்பது அவற்றை இயங்க வைக்கும் காரணத்தால் என்க.

உடனுய்க் கலத்தலின் சிறப்பு :

இங்கே 'உடனுய்' என்பது இருபொருளும் ஒருங்கு சேர்ந்திருப்பது மட்டுமன்று. பொருள்கள் ஒன்று சேர்வது மட்டும் 'உடனுய்' என்பதைக் காட்டாது. அறிவும் கருத்தும் நோக்கும் ஒன்று சேர்தலாகும். இவ்வாறு உடனுதலால் பொருள்கள் இயங்குகின்றன அந்த இயக்கத்துக்காக 'உடனுகக்' கலப்பதென்பது பொருள்; இருபொருளின் இணக்கம் காரியத்துக்கு உதவுகிறது; இந்த இரு பொருள்களுள் ஒன்று எவ்வளவுதான் பெரிய நிலையிலிருந்தாலும், மற்ெருரு பொருளும் இசைவாய் ஒத்து வந்தால் மட்டுமே காரியம் இனிது நிறைவேறுமாதலால், 'உடனுய்' எனப்பட்டது. இக் காலத்தில் இதனைக் 'கூட்டுறவு' 'ஜன நாயகம்' என்கின்றனர்; 'ஒன்ருய்' என்பதனுல் அல்லது 'அபேதம்' என்பதனுல் இந் நுட்பம் பெறப்படாது. காரியத்துக்கு உடனுய் இருப்பது இதனுல் தெளியப்படும்.

இத்தகைய மூவகையான 'அத்துவிதக்' கலப்பையும் தன் அம்மையோடு 'இறைவன் மிகு நுட்ப'மாகக் கொண்டு கலந்

திருப்பான் ; உயிர்களில் இம் மூவகை இயல்பும், 'நுட்ப'மாய் நிகழும். மலங்களில் 'தூல'மாய் நிகழும்.

மலங்கள் மூவகை யாதலால் ஆணவத்தில் மிகு நுட்பமாக வும், கன்மத்தில் நுட்பமாகவும், மாயையில் தூலமாகவும் இறை வனுடைய 'அத்துவிதக்' கலப்புகள் இயைபுறும்.

மாயை என்னும் மலம், 'தூய மாயை' 'தூவா மாயை' 'உலக மாயை' எனவும் பிரிவுபடுதல் உண்டு. இம் மூன்றிலும் 'அத்துவிதக்' கலப்பு, முறையே மிகு நுட்பம், நுட்பம், பருமை என்று கலப்புறும்.

கன்ம மலமும், 'இருப்பு வினை' 'ஏன்ற வினை' 'ஏறு வினை' என்று மூவகையாகக் கூறப்படும். அவற்றிலும் இறைவனது கலப்பு, முறையே மிகு நுட்பம், நுட்பம், பருமன் என நிகழும்.

மாயையால் உண்டாகும் 'தனு' என்னும் உடம்பிலும், 'பரு உடல்' 'நுண்ணுடல்' 'காரண உடல்' (மூல உடல்) என்று மூவகை உண்டு. இவற்றிலுங்கூட எல்லாம் வல்ல இறைவன், தூலம், நுட்பம், மிகு நுட்பமெனக் கலந்திருப்பான்.

இத்தகைய 'அத்துவிதக்' கலப்புகளுக்கு, எல்லாம் வல்ல இறைவன், நுண்ணிய பரவற் பொருளாய் இருத்தலும், உயிர்கள் அதனில் அடங்கிய பரவல் கொண்டிருத்தலும் மலங்கள் உயிர்களின் பரவலில் ஒன்றியிருத்தலும் வாய்ப்பாய் இருக்கின்றன.

மேலும், காணப்படும் எல்லாப் பொருள்களும், மிக நுட்ப மான 'அருவ' நிலையிலும், 'நுட்ப'மான 'அருவுருவ' நிலையிலும் பருமனான 'உருவ' நிலையிலும் விளங்குதலால், இறைவன் கலப்பு இவ் வடிவ நிலைகளுக்கு ஏற்றபடி மிகு நுட்ப, நுட்பப் பருமனாய் நிகழ்ந்து வரும்.

கடவுட் கலப்பு அம்மையிடத்தும், வினைகள் முதலானவற் றிலும் உயிரிலும் இவ்வாறெல்லாம் இருந்து வருதல், இரண்டாம் சூத்திரத்தில் சொல்லப்படுகிறது. மலங்களுள் வினையைப் பற்றி மட்டும் இங்கே சொல்லப்பட்டாலும் ஏனைய மலங்களிலும் கடவுட் கலப்பு இருந்து வருதல் இதுகொண்டே உணரப்படும்.

இரண்டாம் நூற்பா, முறையே உயிரிற் கலத்தலையும், வினையிற் கலத்தலையும், அம்மையிற் கலத்தலையும் குறிப்பிடுகின் றது. ஒன்றாய், வேறாய், உடனாய் என்னும் அக் கலப்பு மூவகைகளுள் உடனாய்க் கலத்தலே இங்கே முதன்மையாய்க் கூறப்படுகிறது. அதுதான் உலகம் காரியப்படுவதற்கு முக்கிய ஏது!

இந் நூற்பா, 'உலகம் திரும்ப உண்டாத'லைப் பற்றிய கருத்துடையது. முதல் நூற்பாவில், மூவகைத் தொழில்களில் அழிப்பைப் பற்றி முதன்மையாய் வந்தமையால், அழிந்தது மீளத் தோன்றுதலைப் பற்றி இரண்டாம் நூற்பா சொல்லுகிறது. அப்படிச் சொல்லும்போதுதான் திரும்பத் தோன்றுதற்குக் காரணமான 'வினை'யைப் பற்றியும், அதனை இயக்கும் 'அம்மை' பற்றியும், வினைக்குப் பற்றுக்கோடாய் இருக்கும் 'மாயை' பற்றியும், மாயை சேர்வதற்குக் காரணமான 'ஆணவம்' பற்றியும் அறிய நேர்கிறது. அதனால் இந் நூற்பா மலங்களின் உண்மையைக் கூறவேண்டிய கட்டாயத்திற்கு வந்தது.

நிமித்த காரணனாகிய இறைவன் செயலுக்குத் துணைக் காரணங்களும் முதற்காரணமும் வேண்டுமாதலால் துணைக் காரணங்களாகிய இருவினை முதலியனவும் முதற் காரணமாகிய மாயையும் இந் நூற்பாவில் விளக்கப்படுகின்றன.

நூற்பாப் பிரிவுகள் :

இது நான்கு பிரிவுகளை உடையது. 'அவையே தானே யாய்' என்பது ஒன்று, ஆணையின் இருவினையின், என்பது மற்றொன்று, 'போக்குவரவு புரிய' என்பது வேறொன்று, ஆணையின் நீக்கமின்றி நிற்கும் அன்றே' என்பது இன்னொன்று.

முதல் பிரிவு :

முதல் பிரிவு 'அவையே தானேயாய்' என்பது. இது, மூன்று வகையாய்ப் பொருள் செயப்படும். 'அவையேயாய், தானேயாய், அவையே தானேயாய்'என்று பிரிவுபட்டு, முறையே 'ஒன்றாய்' 'வேறாய்' 'உடனாய்க்' கடவுள் கலந்துள்ள 'அத்துவிதக்' கலப்பு மூன்றையும் புலப்படுத்துகின்றது.

அவையேயாய் என்பது, இறைவன் எல்லாவற்றோடும் ஒன்றாய்க் கலந்திருக்கும் நிலைமைபற்றி வருகின்றது. இங்கே 'அவை' என்னும் சுட்டுச்சொல், முதல் நூற்பாவில் வந்த 'அவை' என்பதை வழிக்கொண்டுரைக்கின்றது. அவற்றுள், 'அவன்', 'அவள்' என்னும் உயிர்கள் முதன்மையானவை; அதனால் அவற்றை இங்கே வரும் 'அவை' என்பது குறிக்கும். உடலை நீங்கிய உயிர்கள் அஃறிணையாய்ச் சுட்டப்படுதல் வழக்காதலால், 'அவை' என்னும் சொல்லால் அங்ஙனம் சுட்டப்பட்டது.

இனி, சுட்டுச்சொல், தனக்கு முன் அண்மையில் உள்ளவற்றையே சுட்டும் என்பது இலக்கண வழக்கு. ஆதலால், சிவஞான முனிவர் தமது சிவஞானபோதச் சிற்றுரையில்,

'அந்தம் ஆதி' என முதல் நூற்பாவில் வரும் கடைசிப் பிரிவை எடுத்து, அதில், 'அந்தமே ஆதி' எனப் பிரிநிலை ஏகாரம் விரித்து, அதனால் விலக்கப்பட்டு நின்ற உயிர்க் கூட்டத்தை ஈண்டு 'அவை' எனச் சுட்டிச் சொல்வதாகக் கூறினார்.

உலகத்துக்கு அந்தத்தைச் செய்யும் நிமித்த காரணனாகிய இறைவனே முதற் கடவுள் ஆவான், என்று முதல் நூற்பாவின் இறுதிப் பிரிவு கூறுகிறது. அப்படிக் கூறுவதனால் கடவுள் ஒருவரைத் தவிர அவர் ஏவலால் இயங்கும் அதிதேவதைகளாகிய உயிர்களும் ஏனை உயிர்களுமாக எவ்வகை உயிர்களும் கடவுளாகா என்று, 'அந்தமே' என்பதில் வரும் பிரிநிலை ஏகாரம் விலக்கியது. இங்ஙனம் உயிர்களைப் பிரித்துக் கடவுள் ஒருவரைப் பற்றி மட்டும் குறிக்கப்பட்டது.

இதில், மறைந்திருக்கும் ஏகாரத்தை விரித்துக்கூட்டி, 'அந்தமே' என்று பொருள் செய்ய வேண்டியிருக்கிறது. ஏகாரம் அப்படி மறைந்திருப்பது விகாரத்தைச் சேர்ந்தது. விகாரத்தால் தொக்கு நிற்கிறது. அதனால் விகாரத்தால் தொக்க பிரிநிலை ஏகாரம் என்று சிவஞான முனிவர் கூறினார். ஏகாரம் மறைந்து நிற்பது போலவே, அதனால் கடவுளல்ல என்று, விலக்கப்பட்ட அதிதேவதைகள் உட்பட்ட எல்லா உயிர்களும் அங்கே மறைந்துள்ளன. அப்படி மறைந்துள்ள உயிர்களை இரண்டாம் நூற்பாவில் 'அவை' என்பது சுட்டிற்று, என்று சிவஞான முனிவர் கருதுகிறார். 'அவை' என்பது இந் நூற்பாவில் வெளிப்படையாய் வந்தது. அச் சொல் சுட்டியவை எனப்பட்ட உயிர்களும் முதல் நூற்பாவில் வெளிப்படையாய் வந்திருந்தால் நல்லது.

இப்படி மறைந்துள்ள உயிர்களை வெளிப்படைச் சொல் சுட்டுகின்றது என்பதைவிட, முதல் நூற்பாவில் வெளிப்படையாய் வந்த 'அவை' என்பதனால் குறிக்கப்படுவனவற்றையே இரண்டாம் நூற்பாவும் வழிக்கொண்டு கூறியது எனவும், உலகப்பிரிவுகளாகிய 'அவன் அவள் அது', என்னும் அவற்றில், அவையே என்னும் இரண்டாம் நூற்பாவின் சுட்டுச்சொல், முதன்மையாய் உயிர்களை உணர்த்தின எனவும் கூறுதலால் இழுக்கொன்றும் இல்லை.

உலகமெல்லாம் அவனே கலந்து, அவற்றுள் உயிர்களிடத்தில் தனிச் சிறப்பாய்க் கலந்து, அவ்வுயிர்கள் செய்த இருவினையில் மேலுங் கலந்து, வினையை இயக்கும் 'அம்மை'யின்பால் பின்னும் சிறப்பாய்க் கலந்து இறைவன் இங்ஙனமெல்லாம் ஆடல் புரிகிறான் என்பது தொடர்பாய் வருதலால், மாட்சி தருகின்றது.

அவையே என்னும்போது சிறப்பாய் உயிர்களைக் குறிக்கின்றது, எனச் சிவஞான முனிவர் கருதுகின்ற கருத்துக்கும் இதனால் இடரில்லை. உயிரும், உயிரின் இருவினையும், இருவினையால் ஆணையும், ஆணையிற் கலக்கும் இறைவனும், என இவை எல்லாம் தொன்றுதொட்டே வருகின்றன என்பதும் 'அன்றே' என்பதனால் விளங்கும்.

இனி 'அவையே தானேயாய்' என்னும் முதல் பிரிவை எடுத்துக்கொள்வோம். 'அவையேயாய், தானேயாய், அவையே தானேயாய்' எனவெல்லாம் அவ்வொரு தொடரே பொருள் பிரிவுபடுதலால், 'இரட்டுற மொழிந்து கொண்டுரைக்க' என்று உரையாசிரியர் கூறினார். பல கருத்துக்களாய்ப் பிரிந்தாலும், கருத்து இரண்டுபடுதலாகவே இலக்கண ஆசிரியன்மார் குறிப்பாராதலின், இத் தொடர், மூன்று வகையாய்ப் பிரிவு பட்டாலும் 'இரட்டுற மொழிதல்' என்றே கொள்ளப்படும்.

'அவையே' என்பது 'உலகப் பிரிவுகளே' என்று முதலில் பொருளாகி, அவற்றில் 'உயிர்களே' எனப் பின்பு சிறப்பிற் பொருள்பட்டது; அவையேயாய் என்பதனால் அச் சிறப்புப் பொருள்படி 'உயிர்களேயாய்' என்று முதன்மையாய்க் கொள்ளப் படும். 'உயிர்களேயாகி' என்பது அதன் பொருள்; உயிர்களே என்று சொல்லும்படி ஒன்றுகி என்பது கருத்து. மூவகை 'அத்துவிதக்' கலப்பில் ஒன்றுய்க் கலந்து கொள்ளுதலை இது உணர்த்திற்று.

'தானேயாய்' என்று பிரிவுபடும்போது, அது அப் பெருமான் ஒன்றுய்க் கலந்தாலும், தனது சிறப்புத் தன்மைக்கேற்பத் தானேயாய் விளங்குதலாகிய தனது வேறுபட்ட நிலையையும் புலப்படுத்தியது. இது 'வேருய்' என்பதை உணர்த்தும்.

மக்களும் இவ்வாறு தன் சிறப்புக் குன்றுதபடி பலரோடும் கலந்து பழகுதல் வேண்டும். ஆத்திசூடியில் "பெரியாரைத் துணைக்கொள்" என்று சிற்றினத்தார்க்குக் கூறிய ஔவையார், பெரியோரை நோக்கிப் "பையலோடு இணங்கேல்" என்றும் கூறினர். இவை முரண்பட்டவை போலத் தோற்றும். இதை விளக்கவே பின்பு ஔவையார், மூதுரையில், (அ)

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே, நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே, அவரோ
டிணங்கி இருப்பதுவும் நன்று"

என்று உரைத்தார். இப் பாட்டிற் காண்பது, கேட்பது, உரைப்பது, இணங்கியிருப்பது என்று நான்கு செயல்கள் கூறப்படு

கின்றன. இச் செயல்களுள், காண்பதும், கேட்பதும், உரைப்பதும், பெரியோர் பையலோடு கொள்ளலாம். இணங்குவது மட்டும் கூடாது. அதற்காகப் 'பையலோடு இணங்கேல்' என்று பெரியோர்க்குக் கூறப்பட்டது. சிறியோர் பெரியோருடன் எல்லா வகையாலுந் தொடர்பு கொள்ளலாம். ஆதலால், 'பெரியாரைத் துணைக்கொள்' என்று சிறியோர்க்குக் கூறப்பட்டது.

இந் நிலையில் பெரியோரும் சிறியோரும் கூடியிருக்கும் போது, 'பெரியோர் அச் சிறியோரைக் காணலாம், அவர் சொல்லுவதைக் கேட்கலாம், அவர்க்கும் அவரைப்பற்றிப் பிறர்க்கும் ஊக்க மொழிகள் உரைக்கலாம். ஆனால், அவரோடு இணங்கியிருப்பதுமட்டும் கூடாது; தம் ஆற்றலில் பெரியோர் தாமேயாய் வேறுபட்டு விளங்கவேண்டும்' என்று தெரிகின்றது

'அவையேயாய்' ஒன்றுபட்டும், இங்ஙனம் 'தானேயாய்' வேறுபட்டும், உலகங்களோடும் உயிர்களோடும் கலந்திருக்கும் நிலையில் 'அவையே தானேயாய்' அவற்றோடு செயற்பட்டும், இறைவன் இயங்குவான். ஆதலின், அதுகொண்டு உடனாய்க் கலந்திருக்கும் 'அத்துவிதக்' கலப்பு உணரப்படுகின்றது.

'அவையேயாய்' ஒன்றுபட்டதனால் உடனாய்க் கலந்திருக்கும் இயல்பும் பெறப்படுமானாலும், 'அவையே தானேயாய்' என்னும் தொடரில் இறைவனது சிறப்பியல்பும் சேர்ந்துவருதல் காண்கிறோம். தானேயாய் என்று வரும் அச் சிறப்பியல்பு கடவுள் இயல்பு; அம்மையப்பர் இயல்பு; அஃதாவது, பொதுமையும் புதுமையுமான இயல்பு; அம்மை யப்பரிடம் பொதுமையும் புதுமையும் இணையற்ற நிலையில் விளங்குகின்றன.

அச் சிறப்பியல்புகள் உலகத்தினிடத்தும் உயிர்களினிடத்தும் தெய்வ இயல்புகளாகக் கலக்கும்போதுதான், உலகம் மீள உளதாகி உயிர்களும் அதனைப் பயன்படுத்துங் காரியம் நிகழ்கிறது 'அவையேயாய்' என்று ஒன்று சேர்ந்திருத்தலால் மட்டும் காரியம் நிகழ்ந்துவிடாது; காரியம் நிகழ்த்தவேண்டும் என்னுங் கருத்துடன் ஒன்று சேர்ந்திருந்தால் மட்டுமே உடனாய்க் கலந்திருப்பதிற் பயனுண்டு. ஆதலால், உடனாய் விளங்குவதற்கு 'அவையேயாய்' என்பது மட்டும் போதவில்லை. 'அவையே தானேயாய்' என்று கூறவேண்டுவதும் கட்டாயமாகின்றது.

அவையே என்பதில் வரும் ஏகாரம் தேற்றப்பொருள்; தானேயாய் என்பதில் வரும் ஏகாரம் பிரிநிலைப் பொருள்; அது, உலகுயிர்களின் இயல்புகள் அனைத்தையும் இறைவன் தன் ஆற்றலின்கீழ் அடக்கி, எல்லாவற்றையும் தன்வயப்படுத்தித்,

தன் சிறப்பியல்பு தோன்ற வேருய் நிற்றலை உணர்த்தலால், பிரிநிலைப் பொருளதாயிற்று.

ஒன்ருகவும் வேருகவும் உடனுகவும், தொடக்கத்தில், உயிர்களோடும் உலகங்களோடும் கலந்தபின், காலந்தோறும் அவரவர் இருவினைகளிலும் தன் 'சத்தி'யுடன் இரண்டறக் கலந்து அவற்றை இயக்குவான். ஆதலின், 'ஆய்' என்னும் வினையெச்சம் இறந்த காலத்ததாய் வந்தது.

மெய்கண்ட தேவர் இந்த முதற் பிரிவின் மேற்கோளாகச் சிறப்பாய் 'ஆன்மாக்கள் பலவும் முதல்வன் தானேயாய் நிற்கும்' என்று எடுத்துக்கொண்டார். இம் மேற்கோள் தொடரில் 'இவ்வான்மாக்கள் பலவுமாய் முதல்வன் தானேயாய் நிற்பன்' என, முதல்வன் என்னும் சொல் எழுவாயாய் நின்றது. ஆதலால் பெருமான் 'அவையே தானேயானுன்' என்பது முதற்பிரிவின் கருத்தாயிற்று.

பேதம் அபேதம் பேதாபேதம் :

இங்ஙனம் கலத்தலிலும், கடவுள் மற்றவற்ருேடு வேறின்றிக் கலத்தலும், வேறுபாடாய்க் கலத்தலும், இரண்டுமின்றிக் கலத்தலும், கொள்வான் என்று சிலர் கூறுவர். இவற்றை முறையே 'அபேதம்' 'பேதம்' 'பேதாபேதம்' என்றும் சொல்வதுண்டு.

'அபேதத்'துக்குப் பொன்னையும் அதிலிருந்து செய்யப்படும் நகைகளையும் எடுத்துச் சொல்வர்; பொன்னிலும் பொன் இருக்கிறது; அதன் நகைகளிலும் பொன் இருக்கிறது; வடிவந்தான் வேறுபாடு; இரண்டிலும் ஒரே வகையாகப் பொன் இருப்பதனுல், முதல்வனே உலகமாகவும் உயிராகவும் இருக்கிருனே அல்லாமல் வேறு இல்லை என்று ஒரு சாரார் 'அபேதம்' பேசுவர்.

ஆனுல், அதனை வேறொரு சாரார், இருபொருள் கலந்திருப்பதனுல் இரு பொருளின் தன்மைகளும் வேறுவேறு என்று 'பேதம்' கூறுவார்கள். இருளும் வெளியும் போல என்று அவர்கள் ஓர் எடுத்துக்காட்டும் காட்டுவர். இருள் வேறு, வெளி வேறு; ஆயினும், வெளியில் இருள் பரவி நிற்கும்; வெளி தெரிவதில்லை; இருள் மட்டும் தெரிகிறது; அதைக் கொண்டே 'அபேதம்' என்று சொல்லிவிட முடியாது. ஏனென்ருல், வெளி என்னும் வேறுதன்மைப் பொருள் இல்லாவிட்டால் இருள்பரவ இடமில்லை.

இனிச், 'சொல்லும் பொருளும் போல்' பேதாபேதமாய் இருக்கும் என்றும் சிலர் எண்ணுவர். சொல் வேறு பொருள் வேருய் இருந்தாலும், பொருளில்லாதபோது சொல் என்று சொல்லப்படுவதும் இல்லையாதலின், இவை இரண்டும் ஒன்று கூடியே எப்போதும் இருக்கும் என்னும் காரணத்தால் 'பேத மும் அபேதமுமாய் (பேதாபேதமாய்) எஞ்ஞான்றும் உலகமும் உயிரும் கடவுளொடு கலந்து இருக்கின்றன' என்பது அவர்கள் கருத்து. அபேதம் பேதம் பேதாபேதம் என்னும் இம் மூன்றும் சேர்ந்ததற்கே 'அத்துவிதம்' என்று சொல்வர் பெரியோர்.

மேலும், இம் மூன்றிலும் 'உடனுய்' என்னும் காரியக் கலப்பு விளக்கி வற்புறுத்தப்படவில்லை. அபேதமாகவும், பேத மாகவும், பேதாபேதமாகவும், இறைவன் மற்ற உயிர்களோடு கலந்திருப்பதெல்லாம் 'ஒன்ருய்' 'வேருய்' என்பதில் அடங்கி விடும்.

ஒன்ருகவும், வேருகவும் இவ் விருநிலைகளும் கூடிப் பேதா பேதமாகவும் இறைவன் கலந்திருப்பதெல்லாம் காரியப்பாட்டுக் குப் பயன் செய்யாவிட்டால் இவ்வாறு கலந்திருப்பது எதற்கு? இறைவன் செயலில், எதுவும் பயனின்றி இராது; பயன் என் பது, இறைவனுக்கன்று; உயிர்களுக்குப் பயன்; அப்பயனைக் கூட்டுவதற்கே இறைவன் உடனுகி நிற்கிருன். உடனுகி நிற்பது செயல் செய்வதற்காகவே அஃதாவது; ஐந்தொழில் நடத்துவதற்காகவே!

ஆன்மா உலகத்தைக் காணும்போது கண்தான் காண் கிறது. ஆனல், ஆன்மா இல்லாமல் கண்ணே கண்டுவிடாது. கண்ணொளிக்கு ஆன்ம அறிவு காணுங் கருத்துடன் உடனுய் நிற்கிறது. உடனுய் நின்று கண்ணின் வாயிலாக உலகத்தைக் காண்கிறது.

உலகத்தைக் காணுதபோதும், ஒன்ருய் வேறுமாகத்தான் ஆன்ம அறிவும் கண்ணறிவும் கலந்திருக்கின்றன. அபேதமாய்ப் பேதமாய்ப் பேதாபேதமாய் இங்ஙனம் கலந்து நின்ருலும், உலகத்தை அறிவதற்கு ஏற்றபடி ஆன்ம அறிவு கண்ணொளி யோடு ஒன்றிக் கலந்து நிற்பது வேறு; அவ்வாறு உடனுய்க் கலந்து நிற்கும் போதுதான் உலகத்தைக் கண் அறிகிறது. இதனுல் அறிவது உயிரறிவே என்பதைத் தெரிந்து கொள்ளு கிருேம். கண்காணுகின்றது என்று சொன்னுலும் உயிர் காணு கின்றது என்பதுதான் அதன் கருத்து.

அப்படித்தான் உயிர் ஒன்றை அறியும்போதும், அதன் அறிவு அறிவிக்க அறியும் அறிவாய் இருப்பதனுல், அப்படி

அறிவிக்கும் பொருளாக ஒருவன் தேவைப்படுகிருன். அவனைத் தான் 'இறைவன்' என்று சொல்லுகிறோம். ஆதலால், உயிர்களோடு இறைவன், ஒன்ருய் வேருய்க் கலந்திருப்பதோடு, உயிர்களின் அறிவு செயல்படும்படி உடனுயும் கலந்திருக்கிருன் என்றே சொல்லவேண்டி யிருக்கிறது.

உலகத்தைக் கண், பார்க்கும் கருவியானுலும், கண்ணே பார்ப்பதில்லை. இக் கருவியில் உயிரறிவு உடனுய் இருந்து உலகத்தைப் பார்க்கிறது. இஃது உண்மையாதல் போல, இயற்கையாகப் பேரறிவு வாய்ந்த இறைவன், உயிர்க்குயிராய் உள் நின்று உணர்த்த, உயிரறிவு, எதனையும் உணர்கிறது. பார்த்து அறியும் நிலையில், கண்ணில் ஒளியாய், உலகத்தில் எழிலாய், உயிரில் அறிவாய், இறைவன் உடன் கலந்து நிற்கிருன். அதுபோல இறைவன் உடனுய் நிற்கும்போது உயிர்களுக்குப் பிறப்பு மீள உளதாகின்றது. 'அத்துவிதக்' கலப்பில், இங்ஙனம் உடனுய் நிற்பது சிறப்பாகும்.

கடவுள் ஆடல் புரிந்து அசையுந் தெய்வமாய்த் தொழில் நிகழ்த்துதலையும், பருமனில் தொழில் முத்தொழிலாய் நிகழ்தலையும், அவற்றில் அழித்தல் தொழில் ஆற்றல் வாய்ந்ததாய் உயிர்களை ஓய்வுபெறச் செய்யும் கருணையோடு கூடியிருத்தலையும், அவ்வாறு அந்தத்தைச் செய்யும் முதல்வனே முதற் கடவுளாய் முதன்மையுற்று இருத்தலையும், முதல் நூற்பாவில், ஆசிரியர் கூறினுர்.

இரண்டாம் நூற்பாவில், அங்ஙனம் எல்லாவற்ருேடும் கலந்திருந்து தொழில் புரிய வேண்டியிருப்பதனுல் ஒன்ருயும் வேருயும் கலந்திருப்பதோடு உடனுயும் கலந்து தொழில் செய்கிருன் எனவும், ஆதலின் உலகம் மீள உளதாகுந் தொழில் நிகழ்கின்றது எனவும், உடனுய்க் கலக்கும் 'அத்துவிதக்' கலப்பே இதற்குச் சிறப்புக் காரணம் எனவும், இவ்வாறு உலகை உண்டாக்குவதற்கு நிமித்த காரணனுகிய கடவுளுக்கு முதற்காரண துணைக்காரணங்களும் வேண்டப்படும் எனவும், அத்தகைய ஏனைக் காரணங்களாகிய மலங்களின் இருப்பும் அதனுல் இந் நூற்பாவிற் கூறவேண்டிய கட்டாய முண்டாயிற்ருதலின் 'புனர் உற்பத்தி'யைக் கூறுமிடத்து மலங்களின் உண்மையும் கூற நேர்ந்தது எனவும், இறைவன் இவ்வெல்லாவற்ருேடும் இரண்டறக் கலந்து உடனிருந்து இயக்குதலால் இவ்வாறு தொழில்கள் நிகழ்கின்றன எனவும், ஆசிரியர் விளக்கினுர்.

'அபேதம்' கூறும் 'ஏகான்மவாதி'யரும், 'பேதம்' கூறும் மாத்துவரும், 'பேதாபேதம்' கூறும் 'பாஞ்சராத்தியரும்', உடனுய்க் கலக்கும் இச் செயல் முதன்மையை எண்ணிப் பார்க்க வேண்டும். 'அத்துவிதக்' கலப்பு என்பதில், இம் மூன்றும் சேர்ந்துள்ளன. இம் மூன்றுக்கும் அப்பாற்பட்டதாகவும் அது விளங்குகிறது. அப்பாற்பட்ட சிறப்புஎன்பது, உடனுய்க் கலந்திருத்தலே. பேதாபேதம் என்பதில் அது அடங்காது. உலகம் அபேதமாகவும், தனித்தில்லை. பேதமாகவும் தனித்தில்லை; இரண்டோடும் பேதாபேதமாகக் கலந்தபடி யிருக்கிறது என்பதையே 'பேதாபேதம்' என்பது குறிக்கக்கூடும். காரியப்பாட்டுக்காக உடனுயிருந்தும் முழுமுதல் செயற்படுத்திவருகிறது என்பதை அது குறிக்கவில்லை. அதனுல் 'அத்துவிதம்' என்னும் சொல்லின் கருத்தையும் அவரெல்லாரும் இன்னும் நன்ருக நினைத்துப் பார்த்தற்குரியர். ஆசிரியர் மெய்கண்டார் 'அத்துவிதச்' சொல்லின் மெய்யைக் கண்டார், இங்ஙனம் தாயுமானுரால் போற்றப் பட்டார்.

'அபேதம்' என்று சொல்லும்போது, 'வேறு பொருள் எதுவும் இல்லை, இறைவன் ஒருவனே எல்லாமாய் இருக்கிருன்' என்று பொருள் கூறி, உண்மையோடு மாறுபடுதலுண்டு. எல்லாம் ஒருபொருள் என்பதே உண்மையானுல், அதனை எடுத்துச்சொல்லுகிறவர் யார்? அப்படிக் கருதும் பொருள், அந்த ஒரு பொருளுக்கு வேருகத்தானே இருக்கவேண்டும்? ஆதலால், இக் காரணத்தாலும், இருபொருள் உண்மை பெறப் பட்டுவிடும்.

கலப்பினுல் 'அபேதம்' எண்ணலாமே தவிரப், பொருள் தன்மையால் 'பேத'மாகவே இருபொருள்கள் எண்ணப்படும். ஆதலால் 'அத்துவிதம்' என்னும் சொல், ஒன்ருய் வேருய் உடனுய்க் கலக்கும் இரண்டற்ற கலப்பை இனிதுணர்த்தும். வேறு எக் காரணமும் வேண்டாமல் 'அத்துவிதச்' சொல் தானே பொருள்பட்டு நிற்கும். மெய்கண்டதேவர் இங்ஙனம் மேற்கோளும் ஏதுக்களும் காட்டினுர்.

பேதம், அபேதம், பேதாபேதம் என்னும் மூன்றுக்கும் அப்பாற்பட்டதே இரண்டன்மை என்னும் அத்துவிதம் என்பது தோன்ற இம் முதற்பிரிவின் கடைசியில் ''பேதம் என்றும் அபேதம் என்றும் பேதாபேதம் என்றும் பிணங்கும் சமயங்களை யெல்லாம் மறுத்து அம் மூவகை இயல்பும் தன்கண் தோன்ற நிற்கும் அத்துவிதத் தன்மை ஏதுக்களாலும் உவமைகளாலும் உணர்த்தியவாறு'' என்று சிவஞான முனிவர் கூறினுர். 'அத்

துவிதத்' தன்மை மற்றவர்களால் தெளியப்படாமையால், ''புறச் சமயத்தவர்க்கு இருளாய்'' என்று சிவப்பிரகாசத்தின் பாயிரம் கூறியது.

உடனாய் நிற்றலைப் 'பேதாபேதம்' என்பது பொருந்தாது. ஏனென்றால் பேதாபேத நிலையிற், செயல் முதன்மை தெரிய வில்லை. 'பேதாபேதம்' என்பது, ஒன்றும் வேறும் என்று இரண்டையும் சேர்த்துச் சொன்னபடி; 'பேதாபேதம்' என் பதும் 'பேதம்' என்பதும் 'அபேதம்' என்பதும் எல்லாம் இதனால் ஒன்றாய் வேறாய் என்பவற்றிலேயே அடங்கிவிடும். உடனாய் என்பதில் அம் மூன்றுமாய் மேலுமாய் இருத்தல் விளங்கு கின்றது.

'அவையேயாய்' என்பது கருத்துச் செழிப்பு மிக்கது. அஃது, 'அபேத'மாய் விடாது; 'தானேயாய்' என்பதும், 'பேதம்' என்பதாகாது; ஒன்றாய் வேறாய் என்னும் சொற் சிறப்புகள் வேறு; ஆயினும், ஏறக்குறைய அவை பொருந்தலாம்; ஒரு சொல்லுக்கு மற்றொரு சொல் உரையாகாது; வேறு வழியில்லா மையால் உரைக்கப்படுகின்றதே யன்றி வேறில்லை.

மேற்கோளும் ஏதுக்களும் உணர்த்திய ஆசிரியர், இனி அவற்றிற்கு எடுத்துக்காட்டு வெண்பாக்களையும் கூறுகிறார். அவற்றின் விளக்கங்களையும் இனிக் காண்போம்.

(தொடரும்)

நின்றனன் நீங்கா தெங்கும்

உலகெலா மாகி வேறாய் உடனுமாய் ஒளியாய் ஓங்கி
அலகிலா உயிர்கள் கன்மத் தாணையின் அமர்ந்து செல்லத்
தலைவனாய் இவற்றின் தன்மை தனக்கெய்த லின்றித் தானே
நிலவுசீர் அமல னாகி நின்றனன் நீங்கா தெங்கும்.

உருவொடு கருவி யெல்லாம் உயிர்கொடு நின்று வேறாய்
வருவது போல ஈசன் உயிர்களின் மருவி வாழ்வன்
தரும்உயிர் அவனே யாகா உயிரவை தானும் ஆகான்
வருபவன் இவைதா னாயும் வேறுமாய் மன்னி நின்றே.

சிவஞானசித்தியார்

உயிர்மெய் முதல் வேர்ச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

'வா' என்னும் வினைச்சொல் வரலாறு

வள்—வர்—வார்—வா—வ. வர்—வரு.

சொல்லாக்கத்தில் ட த ல ழ ள ஐந்தும் ரகரமாகத் திரியும். அத் திரிவில் லகர ளகரம் பேரளவும், அவ்விரண்டனுள்ளும் ளகரம் பெரும்பான்மையும், ஆகும்.

எ-டு: ட—ர: கடு—கடி—கரி, படவர்—பரவர்.

த—ர: விதை—விரை.

ல—ர: உலவு—உரவு, குலவை—குரவை, குதில்—குதிர், பந்தல்—பந்தர்.

ழ—ர: புழை—புரை.

ள—ர: அள்—அர்—அரு—அருகு, கள்—கர்—கரு, சுள்—சுர், தெளி—தெரி, நீள்—நீர், பிள்—பிர்—பிரி, முள்—முர்—முரு—முருகு (இளமை), விள்—விர்—விரி.

முதற்காலத்தில் முதனிலையாக வழங்கி வந்த சில வினைச் சொற்கள் வழக்கற்றுப் போனதினால், இன்று அவற்றிற்குத் தலைமாறாக அவற்றின் தொழிற் பெயர்களே தமித்தும் துணை வினையொடு கூடியும் வழங்கி வருகின்றன.

எ-டு:

முதனிலை	முற்காலப் புடைபெயர்ச்சி	இக்காலப் புடைபெயர்ச்சி
நகு	நக்கான்	நகைத்தான்
தள்	தட்டான், தட்கின்றான், தட்பான்	தளைத்தான், தளைக்கின்றான், தளைப்பான்
கள்	கட்டான், கட்கின்றான் கட்பான்	களவுசெய்தான், களவு செய்கின்றான், களவு செய்வான்.

களவாண்டான், களவாள்கின்றான், களவாள்வான்; களவாடினான், களவாடுகின்றான், களவாடுவான்; என்பனவும் தொழிற்பெயர் துணைவினை கூடி முதனிலையாகிப் புடைபெயர்ந்

தனவே. ஆள், ஆடு என்பன துணைவினைகள். களவுபண், களவடி, களவுகாண் என்பனவும் துணைவினை கொண்டனவே.

இக் காலத்தில் வளை என்று வழங்கிவரும் முதனிலை முற் காலத்தில் வள் என்றே வழங்கிற்று.

வள்ளுதல் = வளைதல். வள்வு = வளைவு. வள்ளம் = வளைவு, வட்டம், வளைந்த அல்லது வட்டமான பொருள் (தொழிலாகு பெயர்)· வள்ளி = வளைந்த கொடி.

ஒருவன் தன் உறைவிடத்தினின்று அல்லது இருப்பிடத்தி னின்று ஓரிடத்திற்குப் போனபின், அங்கிருந்து உறைவிடத் திற்கு வருவது முன்பின்னாகத் திரும்பியே யாதலால், திரும்பற் கருத்தினின்றே வருகைக் கருத்துப் பிறந்தது. அதனால், திரும்பற்பொருட் சொல்லினின்றே வருகைப் பொருட்சொல் தோன்றிற்று.

திரும்புதல் = வளைதல், திசைமாறி நோக்கி நிற்றல், மீளு தல். மீளுதல் திரும்பி வருதல். காலையிற் சென்று மாலையில் திரும்பினான் என்றால், திரும்பினான் என்பது திரும்பி வந்ததைக் குறித்தல் காண்க.

வலமாகவோ இடமாகவோ திரும்புதலுங் கூடுமேனும், ஒருவன் தான் போன இடத்தினின்று புறப்பட்ட இடத்திற்குத் திரும்பி வருவது முன்பின்னாகத் திரும்பியே யென்பது, சொல் லாமலே விளங்கும்.

திரும்பு என்னும் சொற்போன்றே, வளைதலைக் குறிக்கும் வேறுசில சொற்களும் மீளுதலைக் குறிக்கின்றன.

திரிதல் = வளைதல், மீளுதல். மடங்குதல் = வளைதல், மீளு தல். மறிதல் = வளைதல், மீளுதல்.

"திரிதல் மீளுதல்". (பிங். 7 : 202)

"மறிதர லென்பது மீளுத லாகும்". (திவா. 9)

"மறிதரல் திரிதரல் மடங்கல் மீளுதல்" (பிங். 7 : 444)

அளைமறிபாப்பு என்னும் பொருள்கோட் பெயரிலும், மறி யென்னுஞ் சொல் வளைதலையும் திசைமாறித் திரும்புதலையுங் குறித்தல் காண்க.

ஆங்கிலத்தில் வளைதலை அல்லது திரும்புதலைக் குறிக்கும் turn என்னும் சொல், re என்னும் முன்னொட்டுப் பெற்றுத் திரும்பிவருதலைக் குறிக்கின்றது. He never turned up this side என்னும் தொடரியத்தில், அச் சொல் up என்னும் முன் னீட்டொடு கூடி, வருகைப் பொருளையும் உணர்த்துகின்றது.

இதுகாறுங் கூறியவற்ருல், வா என்னும் வினைச்சொல் வளைதலைக் குறிக்கும் வள் என்னும் முதனிலையினின்றே திரிந்துள்ளமை பெறப்படும்.

இற்றை முதனிலையான வளையென்னுஞ் சொல்லும், வளைய வளைய என்னும் நிகழ்கால வினையெச்ச வடுக்கிலும், வளைத்து வளைத்து என்னும் இறந்தகால வினையெச்ச வடுக்கிலும், திரும்பத் திரும்ப என்னும் பொருள் தோற்றுவித்தலைக் காண்க.

இதனுல், கீழ்ப்படை முதனிலையான வள் என்னுஞ் சொல்லும், முற்காலத்தில் இப் பொருளுணர்த்தினமை உய்த்துணரப் படும்.

வள்—வர்—வார்—வா—வ. வர்—வரு. இனி, வள்—வாள்—வார் என்றுமாம். வாள்—வாளம்=வட்டம். வாள்—வாளி=வட்டமாயோடுகை. வார்—வர்—வரு.

தமிழ் வினைச்சொற்களின் முதனிலை பெரும்பாலும் ஏவலொருமை வடிவிலேயே யுள்ளது. அவற்றுட் சிலவற்றில் மட்டும், ஏவலொருமை வடிவினின்று முதனிலை வேறுபட்டுள்ளது. அவ் வேறுபாடு மிக்க வினைகளுள் ஒன்று 'வா' என்பது. அதன் ஆட்சியிலும் புடைபெயர்ச்சியிலும், வா, வார், வர், வ, வரு என்னும் ஐவேறு வடிவுகள் காணப்படுகின்றன.

ஏவல் வடிவு, பொதுவாக முதனிலையளவில் ஒருமை பன்மை யிரண்டிற்கும் பொதுவாகவே யிருக்கும். ஆயின், வருதல் வினையில் அவ்விரண்டும் வேறுபட்டுள.

ஒருமை	பன்மை
வா	வாரும் (வார்+உம்)
	வாருங்கள் (வார்+உம்+கள்)
	வம்மின் (வரு—வர்—வ+மின்)

பாரும் என்னும் பன்மை யேவலிற் பார் என்பது முதனிலையாயிருத்தல் போன்று, வாரும் என்பதில் வார் என்பதே முதனிலையென்பது தேற்றம். ஆதலால், வார் என்னும் வடிவினின்றே ஏனை நால்வடிவுகளுந் திரிந்திருத்தல் வேண்டும்.

மேற்குறித்த ஐ வடிவுகளின் ஆட்சியும் வருமாறு:

1. வார்

வாரானை (வருகை) என்னும் வினைப்பெயர்; வாராமை என்னும் எதிர்மறை வினைப்பெயர்; வாரான், வாராதான் என்

னும் எ. ம. வினையாலணையும் பெயர்கள் ; வாரான் என்னும் எ. ம. வினைமுற்று ; வாராய், வாரும், வாரீர் என்னும் உடன்பாட்டு ஏவல் வினைகள் ; வாரல், வாராதி, வாராதே, வாராதிர், வாராதீர், வாரன்மின் என்னும் எ. ம. ஏவல்வினைகள் ; வாரல், வாரற்க என்னும் எ. ம. வியங்கோள் வினைகள்; வாரா, வாராத என்னும் எ.ம. பெயரெச்சங்கள்; வாராது, வாராதே, வாராமை, வாராமல், வாராமே, வாராக்கால், வாராவிடின் என்னும் எ. ம. வினையெச்சங்கள் ஆகியவற்றில் வார் என்னும் வடிவம் நிலைத்துள்ளது.

2. வா

வா என்னும் ஒருமையேவல் வினையில் மட்டும் வா என்னும் வடிவம் நிலைத்துள்ளது.

3. வ

வந்தான் என்னும் இறந்தகால வினைமுற்று ; வந்தவன், வந்தான் என்னும் இ. கா. வினையாலணையும் பெயர்கள் ; வந்த என்னும் இ. கா. பெயரெச்சம் ; வந்து, வந்தால், வந்தக்கால், வந்தவிடத்து என்னும் வினையெச்சங்கள் ஆகியவற்றில் வ என்னும் வடிவம் நிலைத்துள்ளது. வம்மின், வம்மோ என்னும் பன்மை யேவல்வினைகள் வருமின், வருமோ என்பவற்றின் திரிபாயே யிருத்தல் வேண்டும்.

ஒரு சில முதனிலைகளின் நெடின்முதல் இறந்தகால வினையிற் குறுகும்.

ஒ. நோ : தா—தந்தான்
சா—(சத்தான்)—செத்தான்
நோ—நொந்தான்
காண்—கண்டான்.

4. வர்

வரவு, வரல், வரத்து என்னும் வினைப்பெயர்கள் ; வராமை என்னும் எ. ம. வினைப்பெயர் ; வராதவன், வராதான் என்னும் எ. ம. வினையாலணையும் பெயர்கள் ; வரல், வரேல், வராதி, வராதே, வராதிர், வராதீர், வரன்மின் என்னும் எ. ம. ஏவல் வினைகள்; வரல், வரற்க என்னும் எ. ம. வியங்கோள் வினைகள் ; வரா, வராத என்னும் எ. ம. பெயரெச்சங்கள் ; வர என்னும் நி. கா. பெயரெச்சம் ; வரின் என்னும் எ. கா. பெயரெச்சம் ; வராது, வராமை, வராமல், வராமே, வராக்கால், வராவிடின் என்னும் எ. ம. வினையெச்சங்கள் ஆகியவற்றில் வர் என்னும் வடிவம் நிலைத்துள்ளது.

இதை வரு என்று கொள்ளவும் இடமுண்டு.

5. வரு

வருதல், வருகை என்னும் வினைப்பெயர்கள்; வருமை (மறுபிறப்பு) என்னும் பண்புப்பெயர்; வருகின்றவன், வருகின்றான், வருமவன் (வருபவன்), வருவான் என்னும் வினையாலணையும் பெயர்கள்; வருகின்றான், வருவான் என்னும் வினைமுற்றுக்கள்; வருதி, வருதிர் என்னும் ஏவல் வினைகள்; வருக, வருதல் என்னும் வியங்கோள் வினைகள்; வருவி, வருத்து என்னும் பிறவினைகள்; வருகின்ற, வரும் என்னும் பெயரெச்சங்கள்; வருவாய் என்னும் வினைத்தொகை ஆகியவற்றில் வரு என்னும் வடிவம் நிலைத்துள்ளது.

இற்றைத் தமிழில் வா என்று திரிந்துள்ள அல்லது ஈறு கெட்டுள்ள வார் என்னும் மூலத்தமிழ் முதனிலை அல்லது ஒருமையேவல், பிற திரவிடமொழிகளிற் பின்வருமாறு திரிந்துள்ளது.

வா—கோத்தம், கோலாமி.

வா, வரி(க)—மலையாளம்.

வா, வாமு, வ—குய் (kui).

வா, வர்—கடபா.

வரா, வரட்—கோண்டி (g).

வர்—நாய்க்கீ.

வெர்—பர்சி (j).

பா (b)—கன்னடம், குடகு.

ப, பர் (b)—பிராகுவி (Brahui).

பர் (பினி), பா (b)—துளு.

பர் (b)—மாலதோ.

பர் (னு) (b)—குருக்கு (ஒராஒன்).

ரா—தெலுங்கு.

ராவா—கொண்டா.

போ—துடவம் (Toda).

இத் திரிபுகளெல்லாம் மேற்காட்டிய தமிழ்த் திரிபுகளுள் அடங்கும்; அல்லது அவற்றால் விளக்கப்படும். இவற்றுள் முதன்மையானவை வா—பா(b), வர்—வ்ரா—ரா, வா—போ என்னும் மூன்றே.

1. கன்னடத்தில் வகரமுதற் சொற்கள் பெரும்பாலும் எடுப்பொலிப் பகர முதலவாக (b) மாறிவிடுகின்றன.

எ - டு :

தமிழ்	கன்னடம்	தமிழ்	கன்னடம்
வங்கு(வளை)	பங்கு(nk)	வழங்கு	பழகு(g)
வட்டம்	பட்ட	வழலிக்கை	பழல்கெ
வடுகு	படகு(g)	வழி	பளி
வணங்கு	பக்கு(gg)	வள்ளம்	பள்ள
வயல்	பயல்	வளர்	பளெ
வயலை	பயலு	வளா	பளா (bh)
வயிறு	பசிறு	வளை	பளெ
வரை	பரெ	வற்று	பத்து
வலம்	பல	வற	பறு
வல்லாளன்	பல்லாள	வரகு	பரகு
வலை	பலெ	வறிது	பறிது
வாவல்	பாவல்	வறுகு	பறுகு(g)

இங்ஙனமே சில ஏனைத் திரவிட மொழிகளிலும்.

2. தெலுங்கிற் சில சொற்களின் முதலீரெழுத்துக்கள் முன்பின்னாக முறை மாறிவிடுகின்றன. அன்று முதலெழுத்தாகிய உயிர்க்குறில் நீண்டுவிடுகின்றது.

எ - டு :

தமிழ்	தெலுங்கு	தமிழ்	தெலுங்கு
அறை	ராய்	உகிர்	கோரு (g)
இல்து	லேது	உள்	லோ
உரல்	ரோலு	எழு	லேய்

வரை (எழுது) என்னுஞ்சொல் இம் முறையில் வ்ராயு என்று திரிந்தபின், ராயு என்று முதன் மெய் கெட்டும் வழங்குகின்றது. இவ்வகையினதே வர்—வ்ரா—ரா (வா) என்னுந் திரிபும்.

3. துடவ மொழியில் பல சொற்களின் ஆகார முதல் ஒகார முதலாகத் திரிந்துள்ளது.

எ - டு :

தமிழ்	துடவம்	தமிழ்	துடவம்
ஆடு	ஒட்	நாய்	நோய்
ஆறு	ஒற்	நான்கு	நோங்க்
கா	கோவ்	பாசி	போதி
காண்	கோண்	பாம்பு	போப்

காய்	கோய்		
கால்	கோல்	மார் (மார்பு)	மோர்
தாய்	தோய்	மான்	மோவ்
தான்	தோன்	வாய்	போய்
நாவு	நோவ்	வாழ்	போத்க்

ஆ—ஓ திரிபும் வ—ப திரிபும் சேர்ந்து வாய்—போய் என்று திரிந்தது போன்றதே, வா—போ திரிபும்.

குமரிநிலத் தமிழே திரவிட மொழிகட்கெல்லாந் தாயாதலின், இக்காலத் தமிழிலும் ஒருசில சொற்கள் திரிந்திருப்பினும், அவற்றின் திருந்திய வடிவத்தையும் ஆணிவேரையும் அறிந்துகொள்ள, போதிய சான்று அத் தமிழிலேயே உள்ளதென்று அறிதல் வேண்டும்.

''எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே.''
(தொல். பெய. 1)

''பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லி னாகும் என்மனார் புலவர்.'' (ஷ ஷ 2)

''தெரிபுவேறு நிலையலும் குறிப்பிற் றோன்றலும்
இருபாற் றென்ப பொருண்மை நிலையே.'' (ஷ ஷ 3)

''மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா.''
(ஷ உரி 96)

''பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்தம் மரபிற் சென்றுநிலை மருங்கின்
எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்.'' (ஷ ஷ 1)

''முன்னும் பின்னும் வருபவை நாடி
ஒத்த மொழியாற் புணர்த்தன ருணர்த்தல்
தத்தம் மரபிற் றோன்றுமன் பொருளே.'' (ஷ ஷ 91)

இங்ஙனம் வேறெவ்வகை மொழியிலுங் கூறப்படவில்லை. கூறவும் இயலாது, பிறமொழிகள் திரிமொழிகளாதலான். அத்தகைத் தன்னேரில்லாதது இயன்மொழியான தமிழே.

வா என்னும் சொல்லிற்கு எதிர்ச்சொல் போ என்பது. அது புகு என்பதன் திரிபு. புகுதல் உள்ளே செல்லுதல். வருதல் உள்ளிருந்து வெளியே திரும்பி வருகல். இவ்விழை இவ்வூசியின் காதிற்குள் போகுமா என்னும் வழக்கை நோக்குக. வணங்குதல் என்னுஞ் சொல், முதலில் உடம்பு வளைந்து அல்லது தலை குனிந்து கும்பிடுதலையே குறித்தது. இன்றோ, பொதுவாகக் கை குவித்தலை மட்டுங் குறிக்கின்றது. இங்ஙனமே, முன்பு ஒன்றன் உட்புகுதலைக் குறித்த போ என்னுஞ் சொல், இன்று ஓரிடத்திற்குச் செல்லுதலை மட்டுங் குறிக்கின்றது. தொடக்கத்தில், ஒன்றைத் துளைத்து ஊடுருவிச் சென்றதைக் குறித்த துருவுதல் என்னும் சொல், இன்று 'நாடு துருவுதல்', 'வான்

துருவுதல்' என்று திறந்த வெளியிடத்தைக் கடந்து செல்லு தலையுங் குறித்தல் காண்க. இது போன்றே, ஓரிடத்தினின்று திரும்பி வருதல் என்று முதற்கண் பொருள்பட்ட வார்தல் அல்லது வருதல் என்னும் வினைச் சொல், இன்று வருதல் என்று மட்டும் பொருள் படுகின்றது.

இன்றும், தன் இடத்தினின்று புறப்படும் ஒருவன் தன்னையே நோக்கிச் சொல்லின், போய் வருகிறேன் என்று தான் சொல்வான். வந்து போகிறேன் எனின், அஃது அயன் மனையிற் சொல்வதாயிருத்தல் வேண்டும்; அல்லது தானே மீண்டும் தன்மனைக்கு வந்து போதலைக் குறித்ததாகல் வேண்டும்.

ஒருவனால், தன் இடத்தினின்று நீங்குவதெல்லாம் செல்லுதல் வினையாலும் தன் இடத்தைச் சேர்வதெல்லாம் வருதல் வினையாலும் குறிக்கப்படுதலின், நீ வருக, அவன் வருக என்று, முன்னிலையானும் படர்க்கையானுமாகிய பிறர் தன்னிடம் சேரும் வினையும் வருகை வினையாலேயே குறிக்கப்படும். அவ்வீரிடத்தாரும் அத் தன்மையானை முன்னிலைப் படுத்தின், நான் வருகிறேன், நான் வருகிறேன் என்று தனித்தனி சொல்லலாம். அவ்வாறன்றி நான் செல்கிறேன் எனின், அது படர்க்கையானின் இடத்தை நோக்கியதாகவே யிருத்தல் கூடும்.

இனி, வார் அல்லது வா என்னும் வினைச்சொல் பல்வேறு வடிவில் திரவிட மொழிகளில் வழங்குவது மட்டுமன்றி, மேலை ஆரிய மொழியாகிய இலத்தீனிலும் சென்று மூலத்தை யொட்டி வழங்குவது வியக்கத் தக்கதாகும்.

ளகர மெய் தமிழிலும் திரவிடத்திலும் னகர மெய்யாகவுந் திரியும்.

எ-டு: தெள்—தென்—தேன். தெளிவு; தேறல் என்னும் சொற்களை நோக்குக.

கொள்—தெ. கொன், கொனு. தெ. கொனி = கொண்டு.

வள்-வன்—வென்—*L. veni*- to come. Veni என்னும் மூலத்தினின்று, advent, avenue, circumvent, convene, event, intervene, invent, prevent, revenue, subvent, supervene venue முதலிய சொற்கள் திரிந்துள்ளன. இவற்றுள் ஒவ்வொன்றினின்றும் சில பல சொற்கள் கிளைத்துள்ளன.

எ-டு: convene—convent, conventual, convention, conventional, conventionary, conventicle, convenient, convenience முதலியன.

கலிபோர்னியாப் பல்கலைக்கழகச் சமற்கிருதமொழி நூற் பேராசிரியர் எம். பி. எமெனோ (M. B. Emeneau) திரவிட மொழி

நூலும் இனநூலும் நாட்டுப்புறக் கதைகளும் பற்றி எழுதி, அண்ணுமலைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட கட்டுரைத் தொகுதியில் (Collected Papers) 6-ஆம் கட்டுரை 'வா' 'தா' என்னும் திரவிட வினைச்சொற்கள் (The Dravidian Verbs 'come' and give) என்பது.

அதில், அவர் தமக்குத் தமிழிற் சிறப்பறிவின்மையாலும் தமிழ்ப்பொத்தகங்கள் கிட்டாமையாலும் ஈ, தா, கொடுவென்னும் சொற்களின் நுண்பொருள் வேறுபாட்டைத் தெரிந்துகொள்ள முடியவில்லை யென்று எழுதியுள்ளதற் கொப்பவே, 'வா' 'தா' என்னும் வினைச்சொற்கள் பற்றிய அவர் ஆராய்ச்சி முடிபுகளும் உள்ளன.

அவை வருமாறு :—

1. வ, த என்பன மூலத்திரவிட அடிகள் (Proto Dravidian stems).

2. அ, அர் என்பன அவ் வடிகள் தன்மை முன்னிலை வினைகளாகும் போது சேர்க்கப்படும் இடைமாற்ற ஈறுகள் (transition suffixes).

3. அ உடன்பாட்டு வடிவுகளிலும் அர் எதிர்மறை வடிவு களிலும் ஆளப்பட்டன.

4. அ + அ = ஆ என்பது சொல்லொலியன் மறுநிலை மாற்று (Morphophonemic alternation).

5. வ, வந்த் என்பன 'வா' என்னும் வினைக்கும், த, தந்த் என்பன 'தா' என்னும் வினைக்கும், உரிய இணையடிகள்.

6. பழந்தமிழில் வார் என்றிருந்த எதிர்மறையடி புதுத் தமிழில் வர் என்று குறுகிற்று.

7. குய்மொழி திரவிட மொழியாராய்ச்சிக்குத் தமிழினும் மிகத் துணை புரிவது.

இவற்றின் பொருந்தாமையை ஈண்டு விளக்கின் விரியும். அறிஞர் கண்டு கொள்க.

தமிழின் தொன்மை முன்மை தாய்மை தலைமைத் தன்மை களையும் வேர்ச்சொல் விளக்கத்தையும் தமிழரே அறியாதிருக்கும் போது, அயன்மொழி பேசும் வெளிநாட்டார் சமற்கிருத அடிப் படையில் திரவிட மூலமொழியின் அடிமுடி காண்பது, நால்வர் பாராதார் நால்வாய் கண்ட கதையே யொக்கும்.

இனி வெளிவரும் 'தா' என்னும் வினைச்சொல் வரலாறு, இங்குக் கூறியதைமெல்லாம் உறுதிப்படுத்தும்.

———

சங்க இலக்கியத்தில் மணிகள்

[திரு. பி. எல். சாமி, பி.எஸி.]

(பரல் ௫ பக்கம் ௨௪௨ இன் தொடர்ச்சி)

காரோடன் பயன்படுத்திய சாணைக்கல் ஒருவகை சிறுவிலை மணிக்கல்லேயாகும். மிக அண்மைக் காலத்தில் இயற்கையில் கிடைத்த இக் கல்லிற்கு ஈடாகச் செயற்கையில் கல்லைச் செய்யும் வழிமுறையைக் கண்டுபிடித்தனர். அதனால் இந்தச் செயற்கைக் கல்லும் (Corundam) என்ற தமிழ்ச் சொல்லடிப்படையில் ஆங்கிலத்தில் வழங்குவதைக் கவனிக்க வேண்டும். சங்க காலத்தில் இந்தச் சாணைக்கல் தொழில் மிகச் சிறப்புற்றிருந்தமையால் இந்தக் கற்கள் வெளிநாட்டிற்கும் ஏற்றுமதியாகியிருக்க வேண்டும். இந்தக் கல் மாணிக்கக் கல்லின் சாதியில் தாழ்ந்த வகையாகும். இதன் காரணமாகவே குருந்தம் என்ற தமிழ்ப் பெயர் (Corundam) மேல்நாட்டு மொழிகளில் சென்றது. சாணைக்கல் செய்வோரின் சங்ககாலப் பெயரான ‘காரோடன்’ பல்லவர்கள் காலத்தில் சாணைக்கல்லுக்கே வணிகப் பெயராக மாறியதைக் காணலாம். பல்லவப் பரம்பரையில் வந்த கோபாலதேவனின் அஸ்தியூர் கன்னடச் செப்பேட்டில் ‘‘கொளகுப்பை, ஜெவாஸிலாரல், கர்ஸபிண்டம், கெம்பை, காரோடம்’’ என்ற வணிக உரிமைப் பெயர்கள் காணப்படுகின்றன. இப்பெயர்களில் கெம்பைக் காரோடம் என்பது அகநானூற்றில் கூறப்பட்ட காரோடன்மார் ஆக்கிய சாணைக்கல்லைக் குறிப்பிட்டிருப்பதைப் பல்லவர் செப்பேடுகள் முப்பதை வெளியிட்ட தமிழ் வரலாற்றுக் கழகம் கண்டுபிடிக்கவில்லை. செம்பு என்பது கெம்பு என்று கன்னடத்தில் வழங்கும். இன்றும் தமிழில் கெம்புக்கல் என்று பேச்சு வழக்கில் கூறுவதைக் காணலாம். ஆனால் கெம்பு என்ற சொல் பல்லவர் காலத்தில் செம்பு என்ற பொருளில் வழங்கியது. ஆதலின் கெம்பைக் காரோடம் என்பது கெம்புக் கல்லால் ஆன காரோடத்தையே குறிப்பிடும். இந்தக் கெம்புக்கல் ஒருவகைத் தாழ்ந்த குருந்தக் கல்லாகும். இக் காலத்தில் கெம்பு என்பது தமிழிலும், கன்னடத்திலும், மலையாளத்திலும் பதுமராகத்தையே குறிப்பிடும். இஃது ஒருவகை மாணிக்கக் கல்லாகும். ஆனால் கெம்பு என்பது சிவப்பு நிறத்தைக் குறிக்கும் என்பது கெம்பு நீலம் என்ற நீலக் கல்லின் பெயரிலிருந்தும் தெரிந்துகொள்ளலாம். ஆதலின் பல்லவர் செப்பேட்டில் குறிப்பிட்ட கெம்பைக் காரோடம் சிவப்பு

நிறமான சாணைக்கல்லே என்பதில் ஐயமில்லை. இந்தக் கல் ஒருவகை விலை குறைந்த கல்லாகும். சாணைக்கல்லுக்கு உதவிய ஒருவகை விலை குறைந்த குருந்தக் கல்லே சங்ககாலத்தில் தென் கன்னடத்திலும் பழனி மலையிலும் சாணைக் கல்லாக மாற்றப்பட்டுச் சங்ககாலத்தில் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் காரணமாக (Corundam) என்ற பெயர் குருந்தம் என்ற தமிழ்ப் பெயரிலிருந்து வந்தது. அக் காலத்திய மேலைநாட்டு மொழிகளில் புகுந்து பரவியது. பல்லவர் காலத்தில் இப் பெயரே வணிகப் பெயராகக் கன்னட மொழிச் செப்பேட்டிலும் வழங்கியது. கன்னடச் செப்பேட்டில் கூறப்படும் மற்ருெரு பெயரான 'கொளகுப்பை' என்பதைக் 'கொள் குப்பை' என்று கருத இடமுண்டு. தமிழிலக்கணங்களில் நெல் குப்பை என்ற வழக்கு காணப்படுகின்றது. குப்பை என்ற சொல் இன்று தாழ்ந்த பொருளில் வழங்கினும் முற்காலத்தில் நெல்குவியல், முத்துக்குவியல் என்றெல்லாம் வழங்கியிருப்பதைக் காணலாம். ஆதலின் 'கொளகுப்பை' என்ற கன்னட வழக்கும் 'கொள்குப்பை' என்ற தமிழ்ப் பெயராகும். கொள் என்ற தானியத்தின் குப்பை என்று பொருள் கொள்ள வேண்டும். சங்ககாலத்தில் காரோடன்மார் பயன்படுத்திய சாணைக்கல் குருந்தக்கல் என்பதும் அஃது ஒருவகை விலைகுறைத்த மணிக்கல் என்பதும் தெளிவாகின்றன.

நன்னன் சங்ககாலத்திலேயே இந்தச் சாணைக்கற்களை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்தான் என்று கருதவேண்டும். நன்னன் காலின் வழியாக, அஃதாவது காற்றைத் தொழில் கொண்டு வந்த கலத்தின் வழியாக, கப்பலின் வழியாக வெண் காற் குதிரைகளைப் பெற்ருன் என்று சொல்லியிருப்பதால் நன்னன் சங்ககாலத்திலேயே சாணைக்கற்களையும் மிளகையும் மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து குதிரைகளை இறக்குமதி செய்தான் என்று கருதலாம். இருப்பினும் மிளகுக்காக உரோமரின் பொன் நாணயங்கள் கொடுக்கப்பட்டதால் நன்னன் ஆண்ட ஏழில் நாட்டில் கி. பி. முதல் இரண்டாம் நூற்ருண்டிற்குரிய உரோமரின் பொன் நாணயங்கள் மிகுந்து கிடைத்துள்ளன. ஆதலின் தமிழ் வேளிர் குடியினனுன நன்னன் பறம்பில் செய்யப்பட்ட சாணைக்கற்கள் உரோமப் பெருநாட்டிற்கும் சென்று பெயர் பெற்றன என்பதில் ஐயமில்லை. சங்ககாலத்திய நன்னன் பறம்பு பல்லவர் காலத்தில் தென் கன்னட நாடான போது சங்ககாலத்துக் 'காரோடம்' என்ற பெயர் கெம்பைக் காரோடம் என்று கன்னடச் செப்பேட்டில் வழங்கப்பட்டது. நன்னன் பறம்பை நேரில் கண்டபோது நான் இந்தச் சாணைக்

கற்கள் இன்றும் கிடைப்பதை அறிந்தேன். ஆதலின் சங்க காலத்தில் கூறப்பட்ட செய்தி இன்றும் உண்மையானதே என்று உறுதியாகக் கூறமுடியும். உரோமர்கள் குருந்தக் கல்லை 'Indian sand' என்றே அழைத்தனர். குருந்தக் கல்லைப் பொடியாகவும் வரவழைத்தனர். இந்தக் கற்கள் சேரநாட்டி லிருந்து வந்ததாக உரோமர் குறிப்புகளிலிருந்து தெரிகிறது. குருந்தக் கல்லிலேயே சாணைபிடிக்கப் பயன்பட்ட கல்லி லிருந்து வேற்றுமைப்படுத்தப்பட்ட மற்றொரு கல்லைச் சிறிது விலையுயர்ந்த மணிக்கல்லாகவும் கருதினர். சங்ககாலத்தில் கூறப்பட்ட வெளிநாட்டு வாணிகச் செய்திகளைக் கிரேக்க, உரோம அறிஞர்களின் செய்திகளோடு ஒப்பிடுங்கால் சங்க நூலறிவு போதிய அளவு இல்லாததால் சில பிழைகளும் குறை களும் அறிஞர்கள் சிலர் செய்த ஆங்கில மொழி ஆராய்ச்சிகளில் காணப்படுகின்றன. வரலாற்றுப் பேரறிஞர் நீலகண்ட சாத் திரியார் எழுதிய நூல்களிலும் இக் குறை காணப்படுகின்றது. இவருக்குச் சங்க நூல்களின் அறிவு போதிய அளவு இன்மை யால் இக் குறை ஏற்பட்டுள்ளதை நடுநிலைமையில் சீர்தூக்கிப் பார்ப்போர் கண்டு கொள்ளலாம். சங்க நூல்களை ஆராய்வது எளிதானதன்று. மிகமிக நுட்பமான செய்திகளைச் சுருக்க மாகச் சொல்வதால் இவற்றைத் தெரிந்தும் தெளிந்தும் ஆராய்வது மிகவும் இன்றியமையாதது. சங்க நூல்களின் செய்திகளைத் தெளிவாக ஆராயாததால் பல்லவர் காலத்துக் கல் வெட்டில் 'கெம்பைக் காரோடம்' என்ற பெயரை வரலாற்று அறிஞர்களும் உணரவில்லை என்பதை இங்குக் குறிப்பிட வேண்டி யுள்ளது.

சங்க நூல்களில் குறிப்பிட்டுள்ள விலை குறைந்த மணிக் கற்களில் மற்றொன்று கட்டளைக் கல்லாகும். கட்டளைக் கல் என்பது ஒருவகை மணிக்கல்லாகும் என்பதைப் பலரும் அறியார். இந்தக் கல்லை ஆங்கிலத்தில் 'Touching stone' அல்லது 'Jaspar' என்றும் கூறுவர். இந்தக் கற்கள் பெரு மளவு இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகி வந்ததாக பிளினி என்ற உரோம ஆசிரியர் கூறியுள்ளார். இந்தக் கற்களில் சில திறங்களைக் கூறியிருப்பினும் சங்க நூல்கள் தெளிவாக இந்தக் கற்கள் கரிய நிறமுடையனவாகக் கூறியிருப்பதைக் காணலாம். பிளினி என்பவர் black Jaspar or touch stone பெருமளவில் இந்தியாவிலிருந்து வந்ததாகக் கூறியுள்ளார். சங்க நூல்களில் கட்டளைக்கல் கறுப்பு நிறமுடையது என்று கூறுவதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். நீலகண்ட சாத்திரியார் எழுதிய 'வெளி நாட்டுப்பயணிகளின் செய்திகள்'(Foreign notices of India)என்ற

நூலில் இத்தகைய செய்திகளைக் கூர்ந்து, ஒப்பிட்டு, ஆராய்ந்து நேர்வுபடுத்திக் கூறவில்லை. கட்டளைக் கல் (touch stone) லைப் பற்றிச் சங்க நூல்களில் பல செய்திகள் உள்ளன. கட்டளைக் கல் மிகக் கறுப்பாக இருந்ததாகச் சங்க நூல்கள் குறிப்பிடுகின்றன. இந்தக் கல்லும் ஒருவகை விலை குறைந்த மணிக்கல்லே என்பதை உணர வேண்டும். பொன்னின் மாற்றை உணர்வதற்கு இந்தக் கல் சங்ககாலத்திலேயே பயன்படுத்தப் பெற்றது. கிரேக்க, உரோமர்களாலும் பயன்படுத்தப் பெற்றது. சங்க காலத்தில் இந்தக் கல்லைப் பண்டைத் தமிழர் மிக நன்ருகத் தெரிந்திருந்தனர்.

"கட்டளை அன்ன மணிநிறத் தும்பி" —ஐங்குறுநூறு, 215.

"பொன்னுரை கட்டளை கடுப்பக் காண்வரக்" —அகம், 178

"நறுந்தா தாடிய தும்பி பசுங்கேழ்ப்
பொன்னுரை கல்லின் நன்னிறம் பெறூஉம்" —நற்றிணை, 25.

"நன்பொ னன்ன புனிறுதீ ரேனல்
கட்டளை யன்ன கேழன் மாந்தும்" —ஐங்குறுநூறு, 263.

"...................................பொன்னின்
உரைதிகழ் கட்டளை கடுப்ப மாச்சினை"
—குறுந்தொகை, 192.

"பொன்காண் கட்டளை கடுப்பக் கண்பின்"
—பெரும்பாணுற்றுப்படை, 220.

"கட்டளை அன்ன வட்டரங் கிழைத்துக்
கல்லாச் சிருஅர் நெல்லிவட் டாடும்" —நற்றிணை, 3.

"பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்"
—குறள், 505.

கரிய காட்டுப்பன்றியும், கருநீலத் தும்பியும் கட்டளைக்கல்போலக் கரியவாக இருந்தனவாகக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். மகரந்தத் தூள் படிந்த தும்பி பொன்னுரைத்த கட்டளைக்கல் போலத் தோன்றியதாகக் கூறப்பட்டிருப்பதையும் காணலாம். கட்டளைக்கல் இந்தியாவில் கிடைத்ததைப்பற்றிப் பிளினி எழுதியுள்ளார். (The best pieces of Black Jaspar or touch stone occurring in collections now come from India.)

கட்டளைக்கல்லில் நீலநிறமுடையவும் மஞ்சள் நிறமுடையவும் இந்தியாவில் இருந்து வந்ததாகப் பிளினி கூறியிருக்கின்ருர். சங்க நூல்களில் மணிநிறத் தும்பியைக் கட்டளைக் கல்லிற்கு ஒப்பிட்டிருப்பதால் நீலநிறக் கட்டளைக்கல்லும் தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கலாம். சங்ககாலத்தில்

தமிழகத்தில் பொன் மலிந்திருந்தமையால் உரைமாற்றைக் காணக் கட்டளைக்கல்லை மிக்குப் பயன்படுத்தியிருப்பர். கட்டளைக் கல்லை வெளிநாட்டுக்கும் ஏற்றுமதியாக்கியிருப்பர்.

விலை குறைந்த மணிகளில் ஒன்றுகப் பளிங்கும் கருதப் படும். சங்கநூல்களில் பளிங்கைப்பற்றிய செய்திகள் வருகின் றன. பளிங்கை ஆங்கிலத்தில் quarts, crystal quarts என்று கூறுவர். பளிங்கு பழங்காலத்தில் காவிரி ஆறு பாயும் பள்ளத் தாக்கில் கிடைத்ததாகக் கூறியுள்ளனர். தமிழ்நாட்டிலும் மலை யாளத்திலும் பளிங்குக் கற்கள் கிடைத்ததாகச் செய்திகள் கூறப்பட்டுள்ளன.

''களிறு பொரக் கரைந்த கயவாய்க் குண்டுகரை
ஒளிறுவான் பளிங்கொடு செம்பொன் மின்னும்
கருங்கற் கான்யாற் றருஞ்சுழி வழங்கும்''
—நற்றிணை, 292.

''பளிங்கத் தன்ன பல்காய் நெல்லி
மோட்டிரும் பாறை யீட்டுவட் டேய்ப்ப
உதிர்வன படூஉங் கதிர்தெறு கவாஅன்''　—அகம், 5.

''புகர்முகம் பொருத புதுநீ ராலி
பளிங்குசொரி வதுபோற் பாறை வரிப்பக்''　—அகம், 108.

''மையில் பளிங்கி னன்ன தோற்ற
பல்கோ ணெல்லிப் பைங்கா யருந்தி''　—அகம், 399.

''கடத்திடைப் பிடவின் றொடைக்குலைச் சேக்கும்
வான்பளிங்கு விரைஇய செம்பரன் முரம்பின்''
—பதிற்றுப்பத்து, 66 : 17—18.

''பளிங்குசொரி வன்ன பாய்சுனை குடைவுழி
நளிபடு சிலம்பிற் பாயம் பாடிப்''
—குறிஞ்சிப்பாட்டு, 57—58.

''காஅய்க் கொண்ட நுகமரு ணூறை
பரூஉப்பளிங் குதிர்த்த பலவுறு திருமணி''
—மலைபடுகடாம், 515—516.

பளிங்குக் கல்லைப் பளபளப்பான கல் என்று பொதுவாகக் கருதி னர். நெல்லிக்கனிக்குப் பளிங்கை ஒப்பிட்டு அகநானூறு கூறி யுள்ளது. முற்றிய காட்டு நெல்லிக்கனி சிவப்பு கலந்த பழுப்பு நிறமாகவும் பளபளப்பாகவும் காணப்படும். இதிலிருந்து பளிங்குக்கல்லின் நிறத்தையும் தன்மையையும் புரிந்து கொள்ள லாம். பளிங்குக்கற்கள் பொதுவாக வெண்மை நிறமாகக் கருதப் பட்டாலும் வெவ்வேறு நிறம் காட்டும் என்று கூறுவர். பதிற்றுப் பத்து வான்பளிங்கு என்று சொல்லியுள்ளது. நற்றிணை 'ஒளிறு வான் பளிங்கு' என்று குறிப்பிட்டுள்ளது. தெளிவான சுனைத் தண்ணீர் பளிங்கைக் கரைத்துச் சொரிந்து வைத்தாற்போன்று

இருந்ததாகக் கூறியிருப்பதால் பளிங்கு கண்ணாடி போலிருக்கும் என்ற கருத்து சங்ககாலத்திலிருந்தது தெரிகின்றது. ஆலங்கட்டி மழை சொரிவது பளிங்கு சொரிவதுபோல இருந்ததாக ஓர் அகநானூற்றுப் பாட்டு உவமித்துள்ளது. பளிங்கு பெரும்பாலும் வெண்மையாகவும் கண்ணாடி போலவும் உள்ளதால் நற்றிணை இவ்வாறு கூறியுள்ளது.

> "அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சம்
> கடுத்தது காட்டு முகம்''
>
> —குறள், 706.

தன்னையடுத்த பொருளது நிறத்தைத் தானே கொண்டு காட்டும் பளிங்கு என்று திருக்குறள் கூறியிருப்பதிலிருந்து பளிங்கு கண்ணாடிபோல நிறத்தைக் காட்டுமென்று கருதினரென்பது தெளிவாகின்றது. உருவைக் காட்டும் கண்ணாடி போலப் பளிங்கினால் செய்த அறை இருந்ததாக மணிமேகலையிலும் கூறப்பட்டுள்ளது.

> "விளிப்பறை போகாது மெய்புறத் திடூஉம்
> பளிக்கறை மண்டப முண்டத னுள்ளது''
>
> —மணிமேகலை 3 : 63 - 64

ஓசை வெளிப்போகாது உடம்பை மட்டும் தோற்றுவிக்கும் பளிங்கால் ஆன அறையுடைய மண்டபம் என்று மணிமேகலை கூறியுள்ளதைக் கவனிக்க வேண்டும். பளிங்கின் வழியாக உருவம் வெளியே தெரியும் என்று கருதினர். கானாற்றருகில் யானை இடித்த கரையில் பளிங்கு மின்னியதை நற்றிணை குறிப்பிட்டுள்ளது. காவிரியாற்றுக் கரையில் பளிங்கு கிடைத்ததாக ஆசிரியர் சிலர் கூறியிருப்பதை இது சார்பாகக் கவனிக்க வேண்டும். பரல் நிறைந்த முரம்பு நிலத்தில் பளிங்கு கலந்திருந்ததாகப் பதிற்றுப்பத்து கூறியுள்ளது. பளிங்கு இத்தகைய நிலத்தில் இயற்கையில் கிடைப்பதைக் கண்டுள்ளனர். பளிங்குப் பாறைகளும் இயற்கையில் காணப்படுகின்றன. தமிழ்நாட்டிலிருந்து மேலை நாட்டினர் பளிங்கைத் தருவித்ததைப் பற்றி கிரேக்க, உரோம ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். சங்க நூல்களும் பளிங்கைப்பற்றிக் கூறியுள்ளதால் இச் செய்தி பொருத்தமாகவே உள்ளது. மணிமேகலையில் பளிங்கினால் அமைந்த பளிக்கறைப்பள்ளியும் பளிக்கறை மண்டபங்களும் கூறப்பட்டிருப்பதால் அக் காலத்தில் பளிங்கு தமிழ்நாட்டில் நிறையக் கிடைத்திருக்க வேண்டுமென்று கருதலாம்.

அகநானூற்றில் பளிங்கைப்பற்றி ஓர் அரிய செய்தி கூறப்பட்டுள்ளது. பளிங்கைக் காசாகப் பயன்படுத்தினர் என்ற செய்தி இதுவரை கேட்கப் படாததாகும்.

"புறவுக்குயின் றுண்ட புன்காய் நெல்லிக்
கோடை யுதிர்த்த குவிகட் பசுங்காய்
அறுநூற் பளிங்கின் துளைக்காசு கடுப்ப
வறுநிலத் துதிரும் அத்தம் கதுமென" —அகம், 315.

உருண்டையான பளிங்குக் கற்கள் காசாகப் பயன்பட்டதாகத் தெரிகின்றது. இக் காசுகளைச் சேர்த்து வைக்கத் துளையிட்டு நூலில் கோத்துவைத்தனர் என்றும் தெரிகின்றது. இவ்வாறு நூலில் கோத்த பளிங்குக்காசுகள் நூலறுந்து உதிர்ந்தபோது நெல்லிமரம் கோடை காலத்தில் உதிர்த்த குவிந்த பசுங்காய் போல இருந்ததாக அகநானூறு கூறியுள்ளது. பளிங்குவடம் என்று இதுவே பிற்காலத்தில் அழைக்கப்பட்டது. சங்க காலத்தில் தமிழ்நாட்டில் வழங்கிய பொன் நாணயங்கள் வேப் பங்கனி போன்று உருண்டையாக இருந்ததை 67ஆம் குறுந் தொகைப் பாட்டிலிருந்து தெரிந்துகொள்ளலாம். அது போன்றே பளிங்குக் காசுகளும் உருண்டையாக இருந்தன என்று தெரிகின்றது. ஆதலின் பளிங்கால் ஆன நாணயங்களும் உருண்டையாக இருந்தன வென்பதில் ஐயமில்லை. மலைபடு கடாத்தில் பளிங்கு உதிர்த்த திருமணி கூறப்பட்டுள்ளது.

"காஅய்க் கொண்ட நுகமரு ணூறை
பரூஉப்பளிங் குதிர்த்த பலவுறு திருமணி
குரூஉப்புலி பொருத புண்கூர் யானை
முத்துடை மருப்பின் முழுவலி மிகுதிரள்"
—மலைபடுகடாம் - வரி 515 - 518.

நச்சினார்க்கினியர் "பரூஉப் பளிங்கு உதிர்த்த பலவுறு திருமணி" என்பதற்கு 'மரத்தினின்றும் சிதறியுதிர்த்த பருத்த நிகரமாகிய கருப்பூரம்' என்று உரை கூறினர். ஆனால் நச்சினார்க் கினியர் உரை பொருத்தமற்றது. சங்ககாலத்தில் கருப்பூர மரம் தமிழ்நாட்டில் இருக்கவில்லை. பல்லவர் காலத்தில்தான் ஆதலின் நச்சினார்க்கினியர் உரை தவறு. ஆதலின் பெரிய பளிங்கு உதிர்த்த திருமணி கருப்பூரம் அன்று, அது பளிங்கின் தொடர்பாகிய மணியாகும். காட்டுப் பூனையின் கண் போன்ற கல்லாகிய கோமேதகத்தைப் போல (Beryl) பளிங்குக் கல்லிலும் ஒருவகைக் கல் (quartz cat's eye) அன்றைய தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டதாக பிளினி முதலிய ஆசிரியர்கள் கூறி யுள்ளார்கள். இந்தக் கல்லே பெரிய பளிங்கு உதிர்த்த திருமணி என்று கருத வேண்டும். திருமணி என்ற சொல் சங்க நூல்களில் விலையுயர்ந்த மணிக் கற்களுக்கே வழங்கியிருப்பதால் விலை குறைந்த பளிங்கிலிருந்து தோன்றிய உயர்ந்த சிறந்த

மணிக்கல்லான quartz cat's eye என்ற கல்லையே பளிங்குதிர்த்த திருமணியாகக் கருத வேண்டும். பளிங்கு வயிரம் என்றொரு பெயர் கல்வெட்டுகளில் வருகின்றது நச்சினார்க்கினியர் கருப்பூரம் என்று கூறியிருப்பது காலமலைவு (Anacronism) என்ற குற்றத்தின் பாற்படும். சங்ககாலத்தில் கருப்பூர மரம் தமிழ் நாட்டிற்கு வரவில்லை. பிற்காலத்திலேயே மலேயாவிலிருந்து வந்தது என்பதை உணர வேண்டும். மரத்திலிருந்து எடுக்கப் படும் கருப்பூரம் வெண்மையாகப் பளிங்கு போலிருப்பதால் நச்சினார்க்கினியர் இத்தகைய உரை கூறினர். பளிதம் என்ற சொல் கருப்பூரத்தைக் குறிக்கும். பளிங்கு ஒருவகைக் கல்லையே குறிக்கும். பளிதமும் பளிங்கும் ஒன்றல்ல. இயற்கை உயிர்கள், பொருள்கள் பற்றிச் சங்ககாலத்தில் இருந்த சிறந்த அறிவு பிற் காலத்துத் தமிழர்க்கு இன்மையால் இத்தகைய மயக்க உரை களையும் குழப்பமான பொருளையும் பிற்கால விளக்கங்களில் காண்கிறோம். பளிங்கை நிகண்டுகள் படிகம் என்று அழைக்கும். பளிக்குவடமும் நூல்களில் கூறப்பட்டுள்ளது. பளிங்கு வழியாகப் புறத்தில் தெரியும் பவளத்தைப் போற்றினர். "பளிக்கறைப் பவழப்பாவை பரிசெனத் திகழும் சாயல்" என்று சீவகசிந்தா மணி கூறியிருப்பதைக் காணலாம்.

சங்க நூல்களில் கூறப்படும் வேறொரு மணி பவளமாகும். இது சங்கநூல்களில் துகிர் என்றழைக்கப்பட்டுள்ளது. மணி களில் துகிரும் முத்தும் கடலுயிர்களில் தோன்றியதாகும். இவை மணிகளாகக் கருதப்பட்டாலும் கல்லிலிருந்து பிறந் தவையல்ல. இருப்பினும் இவற்றை மணிகளாகவே கருதினர். மணிகளில் மிகச் சிறந்தவற்றில் ஒன்றாக முத்து கருதப் பட்டது. பவளமும் ஒரு மணியாகக் கருதப்பட்டது. பவளம் தமிழ் நாட்டிலோ இந்தியாவிலோ கடலில் விளையவில்லை. கிரேக்க, உரோம ஆசிரியர்கள் குறிப்பிலிருந்து பவளம் தமிழ்நாட்டிற்கு மேலை நாடுகளிலிருந்து அனுப்பப்பட்டதாகத் தெரிகின்றது. காவிரிப்பூம்பட்டினத்தில் குவிந்த பண்டங்களில் தென்கடல் முத்துங் குணகடல் துகிரும் பட்டினப்பாலையில் (189) கூறப் பட்டுள்ளன. கீழ்த்திசைக் கடலில் பிறந்த பவளம் என்று கூறினும் தமிழ்நாட்டுக் கீழ்க்கடலில் உலகிலேயே சிறந்த முத்து மணி கிடைத்ததேயன்றிப் பவளம் கிடைத்ததில்லை. ஆதலின் குணகடல் துகிர் என்பதற்குக் கீழ்க்கடல் வழியாக வெளிநாட்டி லிருந்து இறக்குமதியான பவளம் என்று பொருள் கொள்ள வேண்டும்.

(தொடரும்)

கவிதையில் குறிப்புற உணர்த்தல்

டாக்டர். சொ. சிங்காரவேலன் எம்.ஏ., பிஎச்.டி.

[தமிழ்த்துணைப் பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மாயூரம்]

பாத்திரப்படைப்பு :

கவிஞன் தான் படைக்கும் கவிதைகளில் சில பாத்திரங்களைப் படைத்துக் கொண்டு அவற்றின் வாயிலாகப் பேசுதலும் உண்டு. அவ்வாறு பாத்திரங்களின் கூற்றாக அவன் பேசும் பொழுது தன் நுண்ணறிவை அவற்றின் மேலிட்டுச் சிறப்பிப்பதும் உண்டு. இதற்கு எடுத்துக்காட்டாக நம் சங்கப் புலவர்களின் விழுமிய கவிதைகள் பலவற்றைக் காட்டலாம். ஆம்; சங்கப் பாடல்களில் பெரும்பாலானவை இவ்வாறு அமைந்தனவே. தலைவன், தலைவி, தோழி என்ற பாத்திரங்களின் கூற்றாக எண்ணற்ற பாடல்களும், தாய், கண்டோர், தோழன் முதலிய ஏனைய பாத்திரங்களின் பேச்சாகப் பல பாடல்களும் இவ்விலக்கியத் தொகுப்புகளுட் காணப்பெறும். கூற்றிற்குரியார் இன்னின்னார் என்று தொல்காப்பியரும் வரையறுத்துள்ளார். இலக்கிய மரபுக்குட்பட்டுச் சில பாத்திரங்கள் கூற்றிற்கு உரிமையுடையன வல்ல என்றும் நூற்பாச் செய்துள்ளார் தொல்காப்பியர்.

இலக்கிய மரபுகளைப் பேண வேண்டுவது தொல்காப்பியனாரைப் போன்ற சான்றோர்க்குரியது ஆதலின் இத்தகு வரையறையை நாம் காணலாகின்றது.

குறிப்புற உணர்த்தல் :

இவ்வாறு பாத்திரங்களின் பேச்சாக வரும்போது சீரிய கூரிய அறிவுநலம் உடைய கூற்றுக்களாகப் பல இடங்கள் தோன்றுகின்றன. குறிப்பாகக் கூறுவதும், அங்ஙனம் கூறுங்கால் அறிவான் மிகுந்தோர் குறுமுறுவல் செய்து மகிழுமாற்றாற் பேசுவதும் நம் சங்கப் பாக்களுள் காணக்கிடப்பன. குறிப்புற உணர்த்தல் என்ற திறம் உடைய இலக்கிய மரபாக இவற்றை நாம் கொள்ளலாம். ஓர் அழகிய குறிப்புப் பேச்சினை,—தங்கால் முடக் கொற்றனர் என்ற தமிழ்க் கவிஞரின் இனிய பாடற் செய்தியினை இங்கு நோக்கி யின்புறலாம்.

கற்பனை அமைப்பு :

தோழி செவிலித்தாய்க்கு அறத்தொடு நிற்பதாகக் கற்பனை. தலைவியின் உயிர்த் தோழியின் கூற்று பாட்டு முழுதும். தலைவன் தலைவியின் களவொழுக்கத்தை மிக நாகரிகப் பாங்கு தோய உணர்த்த முற்படுகின்றாள் தோழி. அவளது நெஞ்சிற் கேற்பப் பாடல் குறிப்பு என்னும் அழகு தோன்ற மலர்கின்றது.

பொருளமைப்பழகு :

செவிலித்தாய் தோழியைப் பார்த்துக் கேட்டாளாம் : தன் மகள் பால் பருகாது துன்பம் எய்தி மிகவும் பசந்துள்ளமைக்குக் காரணம் என்ன என்று. அவ் வினாவிற்கு விடை தருவாள் போன்று தொடக்கத்தை அமைத்துக் கொள்கின்றாள் தோழி. ''அன்னையே! வாழ்வாயாக; நான் கூறுவதனை விழைந்து கேட்பாயாக'' என்று பணிவு கலந்த இனிய சொற்களை முதற்கண் பெய்து கூறத் தொடங்குகின்றாள்.

> ''அன்னாய்! வாழி! வேண்(டு) அன்னை! நின்மகள்
> பாலும் உண்ணாள் பழங்கண் கொண்டு
> நனிபசந் தனள்என வினவுதி.''

இந்தச் சொற்கள் மிக்க பணிவுடன் வெளிப்படுகின்ற அமைப் பழகு நோக்கத் தக்கது. செவிலித்தாய் தன் வாய்மொழியைச் செவிகொடுத்துக் கேட்டல் வேண்டும் என்ற குறிப்பினள் ஆகலின் தோழியின் இந்த உள நிலை அவள் வாயிலாக வெளி வரும் சொற்கள் அனைத்திலும் உணர்த்தப்படுகின்றது என்று கூறலாம். விடை கூறத் தொடங்கிவிட்டாளேனும், தன் னடக்கம் தோன்றத் தாய் நம்பும் வண்ணம் மிக விழிப்புடன் ஒரு தொடரை அமைத்துத் தனக்கு ஒரு வேலி அமைத்துக் கொண்டுவிடுகின்றாள் அவள். எப்படி? ''அதன் நெறியினை யானும் தெளிவாக உணர்ந்திலேன்'' என்று.

> ''அதன் திறம்
> யானும் தெற்றென உணரேன்''

என்ற சொற்களில், மெல்லமெல்ல ஓர் உண்மையை வெளிப் படுத்தும உள நிலை புலனாகின்றது அன்றோ? தலைவன்—தலைவிய ரின் அன்பொழுக்கத்தை வெளிப்படுத்தும் நெறியிலும் ஓர் அமைதியான ஒழுங்கைக் கடைப்பிடிக்கும் மதி நுட்பத்தை இத் தோழியின் பேச்சில் அமைந்த ஒவ்வொரு சொல்லிலும் காண் கின்றோம். யான் தெளிவாக உணராவிட்டாலும் ஓரளவிற்கு அதனை உணர்வேன் என்ற முன்னுரை, செய்தியின் வேகத்தைக்

குறைப்பதுடன் செவிலித்தாயின் உள்ளத்துச் சினக்குறிப்புச் சிறிதும் எழாதபடி காக்கும் முன்னறிவு வாய்ந்தவள் என்பதை இனிது உணர்த்துவதாக அமைகின்றது அன்றோ?

புலிபுலி என்னும் பூசல்:

வேங்கை மரத்திற் பூக்களைக் கொய்து மகிழ விழையும் மகளிர் 'புலி' 'புலி' என்று கூவினால், அம் மரத்தின் கிளை தாழ்ந்து வளைந்து கொடுக்கும் என்பது இலக்கிய வழக்கு. அவ்வாறே ஒருநாள் தானும் தலைவியும் மற்றும் பிறரும் கூடி வேங்கை மரத்திற் பூக்கொய்து நிற்கும்போது, 'புலி' 'புலி' என்று கூவிய செய்தியையும், அந்த ஒலியை மெய்யாகக் கருதிய ஆடவன் ஒருவன் வில்லும் கணையும் துணையாக விரைந்து வந்த செய்தியையும் தோழி கூறுகின்றாள். அந்த ஆண்மகனின் அழகுமிகுந்த தோற்றத்தையும் குறிப்பாக உடன் உணர்த்தி விடுகின்றாள் அவள்; பெண்களின் கண்களைப் போன்ற அழகான செங்கழுநீர்ப் பூக்களை ஊசியாற் கோத்துச் சுற்றிக் கட்டிய மாலையை அவன் அணிந்திருந்தான்; தலையின் ஒரு பக்கத்தே வெட்சிப் பூவாற் கட்டிய கண்ணி சூடியிருந்தான்; மகளிரது மார்பு பாய்ந்து முயங்குதற்கேற்ற அகன்ற மார்பினனா யிருந்தான்; அந்த அகன்ற மார்பிலே சிவந்த சந்தனம் பூசி யிருந்தான்; "அந்தப் புலி எவ்வழிச் சென்றது?" என்ற வார்த் தைகளை அவன் இதழ்கள் உதிர்த்தன.

புலி புலி என்ற சொற்கள் வேங்கைப் பூமரத்தின் கிளைகளை வளைத்தற்கு யாங்கள் உதிர்த்தவை என்று அவன் உணராத கருத்துடையான். எதிர்பாராத அவ்வாண் மகனுடைய வருகை யால் எங்களுள் ஒருவர் முதுகில் ஒருவர் உடல் மறைந்து நின் றோம் நாங்கள்; நாணமுற்ற எம் நிலைமையைக் கண்டதும் அவன் மேலும் பேசிய மொழிகள் இவை:

பூவையர் வாயிற் பொய்யோ?

"விரும்பி ஐவகையாக வகுத்த கூந்தலையும் அழகிய நெற்றியினையும் உடைய கரிய நெய் பூசிய கூந்தலைப் பெற்ற இளைய பெண்களே! நுமது வாயிற் பொய்ச் சொற்களும் வரலாமோ?"—தலைவனின் இந்தச் சொற்கள், எம்பால் அவன் கொண்ட அன்புணர்ச்சியை விளக்குவனவாக இருந்தன.

"குதிரைகளின் வேகத்தை அடக்கி மெல்லெனத் தன் தேரைச் செலுத்தத் தொடங்கினன்; செல்லும்போது, நின் மகளுடைய மையுண்ட கண்களை நோக்கியபின் எதிர்நோக்க லாகப் பலமுறை நோக்கிப் பிறகு சென்றான்" என்று முடித்தாள்

தோழி ; ''ஞாயிறு மறைகின்ற அந்த அந்தி நேரத்தில், அவன் சென்று மறைந்த திக்கினையே நோக்கிய தலைவி, 'இவன் ஓர் ஆடவனே' என்று கூறினள் ; ஆராய்ந்து அறியும் அறிவு மிக்கோர்க்கு அதனளவாக ஒரு கோட்பாடு உண்டு'' என்று அவளது கூற்றுத் தொடர்ந்து முடிகின்றது.

காதல் ஒழுக்கத்தின் தோற்றுவாய் :

''இவன் ஓர் ஆடவனே'' என்ற தலைவியின் கூற்றும், தலைவன் பன்முறை நோக்கிச் சென்ற நோக்கும், அவர்கள் இருவர்மாட்டும் கொண்ட காதல் ஒழுக்கத்தின் தோற்றுவா யாகவே கொள்ளத்தக்கன என்பது தோழி கூற விழையும் கருத்து. அக் காதல் நோக்கே, ''பாலும் உண்ணமல் பழங்கண் (துன்பம்) கொண்டு மிகவும் உடல் பசப்பு எய்திய நிலையைத் தந்த தாகும்'' என்று தான் கூறவந்த கருத்தைத் தெளிவாக்கி விட் டாள் அவள்.

கவிதை வழியே கருத்துரை :

''அறத்தொடு நிற்றல்'' என்ற பழங்காலக் களவிலக்கிய மரபை இவ்வாறு இப் பாட்டு மிக்க அழகுடன் ஓவியம் ஆக்கிக் காட்டுகின்றது.

''அழகானவர்கள் வாயிலிருந்து பொய்யும் வரலாமோ'' என்ற தலைவனின் மொழி, உடல் அழகும் உள்ள அழகும் உடை யவராதலே விழைதக்கது என்ற இனிய கருத்தைத் தெளிவு படுத்துகின்றது. அழகற்ற மனத்தின் வாய்மொழியே பொய் யாக இருக்க முடியும்; உள்ளம் கவின் பெற விளங்குமாயின் வாய்மையே அங்கிருந்து எழுவதாகும் என்பது குறித்த கருத்து. ''சித்தம் அழகியார்'' என்ற திருவாசகத் தேன்தொடர் இவ் விடத்து ஒப்பிட்டு உணர்தற்குரியது.

தலைவன் தலைவியைக் காண வந்தது புலியினிடத்தினின்றும் அவளைப் புரக்க வேண்டும் என்ற உயர்நோக்கம் உடையது என்பது தோழி கூறவந்த கருத்து.

''எளித்தல் ஏத்தல்'' (தொல்-பொருள்-12) என்ற நூற்பாவில், ஏதீடு என்ற வகைக்கு இப் பாடலை எடுத்துக் காட்டுவர் நச்சினார்க்கினியர். தலைவி கொண்ட ஐயத்துக்கண், தலைவனைத் தெய்வம் என்று துணிந்தாளல்லள் என்பது, ''மற்றிவன் மகனே தோழி என்றனள்'' என்ற தொடரால் விளங்கும் என்பது அவ்வுரைகாரர் கருத்து. ''உருவு நிறுத்த காமவாயில்'' இத் தொடரால் விளங்கும் என்பர் பேராசிரியர். இது தலைவனை உயர்த்துக் கூறிய கூற்று என்று இளம்பூரணர் கூறுவர்.

பொருணலம் ததும்பும் தொடர் :

"அதன் அளவு உண்டுகொல் மதிவல்லோர்க்கே'' என்ற தொடர் அமைப்பு உன்னி உன்னி மகிழத்தக்க பொருள் நுட்பம் உடையதாகப் பொலிகின்றது.

கவிதையை நுட்பமாக உணர்தல் :

உணர்த்தவந்த செய்தியை வெளிப்படையாக உணர்த்தாத தோழி, கூற வேண்டிய செய்திகளில் சிலவற்றைத் தெரிவித்து எஞ்சியதனைத் தெரிவித்துவிட்ட ஓர் அழகிய 'உத்தி'யைக் கையாண்டு, மிகத் தெளிவாக உணர்த்தியவள் ஆகிவிட்டாள். இது தான் தலை சிறந்த கவியழகுகளுள் ஒன்று. மேடைப் பேச்சு முதலியவற்றை, உரைநடைப் பகுதிகளை மேம்போக்காகக் கேட்டாற் போதும்; ஆனால், அழகிய கவிதை ஒன்றை நுட்பமாக நோக்க வேண்டும்; அதன் ஆழ்ந்த இயல்புகளை மிக உற்றுக் கேட்க வேண்டும்.

["Oratory is heard; Poetry is overheard"—Herbert Grierson; "*The Background of English Literature* (1962) p. ll] ஏனெனில் கவிஞன் தான் உணர்ந்த செய்திகளை உணர்வோர் சிலர்க்காகவே எழுத முனைகின்றான் என்பர்; அது மட்டுமோ? கவிதைகளில் வரும் அநுபவங்களைத் துய்க்கும் மனம் உடையார் சிலரே ஆதலின் அத்தகு மாந்தர்க்காகவே கவிஞனின் எழுதுகோல் எழுதுகின்றது. அவன் கையாளும் சொற்கள் ஒவ்வொன்றும் புறக்கணிக்க இயலாதவை. தனித் தன்மை வாய்ந்தவை; பல்வேறு வண்ணக் கலவைகளுக் கேற்ற தன் எண்ணக் கலவைகளை அவன் இலக்கியமாக்குகின்றான். ஆதலின் அவனது நுட்பமான குரலுக்குச் செவிசாய்க்கக் கூடியவரே கவிதை யின்பத்தினை உள்ளபடி துய்ப்பவராவர். ("The poet writes for those who have ears to hear... you must appreciate the colour of every word he uses the value of every cadence"—Herbert Grierson, Ibid. p. 11-12).

இந்த அடிப்படையில் இக் கவிதையில் வரும், "மற்றிவன் மகனே தோழி என்றனள்,'' "அதனளவுண்டு கோள் மதிவல் லோர்க்கே'' முதலிய தொடர்களை ஆழ்ந்து சிந்தித்துப் பொருளமைதி கொள்ள வேண்டியுள்ளது. 'இவன் ஓர் ஆடவன்' என்று தலைவி தன்னை நோக்கிக் கூறியதாகவும் அவன் சென்ற திக்கினையே நோக்கிக் கொண்டிருந்ததாகவும் கூறும் வாய்மொழிகள் தலைவி அவன்மீது கொண்ட காதலை நுட்பமாக உணர்த்தி விடுகின்றன. ஆடவனுக்குரிய இயல்புகள் யாவை? "பெருமையும்

உரனும் ஆடூஉ மேன" என்பர் தொல்காப்பியர். அஞ்சு கின்றோர்க்கு அச்சம் போக்கும் வீரப்பெருமை ஓர் ஆடவனுக்கு இயல்பாக இருக்க வேண்டிய ஒன்றாகும். அன்றியும் அவன் தேரேறிச் சென்று வினை முடிக்க வல்லவனாகத் தெரிவிக்கப் பெற்றமை, "வினையே ஆடவர்க் குயிரே" என்ற குறுந்தொகைப் பாடல்வரியால் விளங்கும்.

அக்கால மாந்தர் தொழின் மேம்பாட்டைத் துலக்குவதாக உள்ளது. "நும்மிடத்துப் பொய்யும் உளவோ" என்று தலைவன் கூறுவதாக வரும் செய்தி, வாய்மைக்கு மதிப்பு வழங்கும் பண் புடையாளன் அவன் என்பதைக் குறிப்பாக உணர்த்துகின்றது. அவன் சீரிய அறிவு நலம் (உரன்) வாய்ந்தவன் என்பதனை இது விளக்குவதாகக் கொள்ளலாம். ஆதயின் இத்தகு நல் லியல்புகளை உடைய இவன் "குற்றமற்ற ஒரு குரிசிலே" என் பாளாக, "இவன் மகனே தோழி" என்று தலைவி கூறினள். ஆடவர்க்குரிய இயல்புகள் வாய்க்கப் பெற்ற அத் தலைமகன் எவ் வாற்றான் நோக்கினும் தலைமகட்குப் பொருத்தமானவனே என்பதும், அவன்மீது அவள் கொண்ட மையல் நன்றான ஒழுக் கமே என்பதும் தோழி செவிலித்தாய்க்குக் கூறுமற் கூறிவிடும் செய்திகள். எளிய சொற்கள்தாம் கவிதையில் கவிஞனாற் கையாளப் பெறும்போது எவ்வாறெல்லாம் சிந்திக்க வைக் கின்றன! செம்பொருள் நல்குகின்றன என்பது எண்ணி எண்ணி வியக்கத்தக்க ஒன்று ஆகும்.

ஒப்பற்ற கவிதை 'உத்தி' :

தோழி என்ற பாத்திரத்தையும், செவிலி என்ற பாத்திரத் தையும் கற்பனை செய்துகொண்டு ஒன்று மற்றொன்றை நோக்கி உரைப்பதாகப் பாடல் வடிவத்தைப் பாங்குபெற அமைத்துக் கொண்ட தங்கால் முடக் கொற்றனார் தலைவனையும், தலைவியை யும் அப் பாத்திரப் பேச்சின்வழி அழகிய ஓவியமாக்கி விடுகின்றார் அவ்வோவியமோ அவ்விருவருடைய அழகிய உடலமைப்பை விளக்குவதுடன் உள்ளத்தின் அமைப்பையும் இனிது புலப் படுத்திவிடுகின்றது. இதுவே ஒருகவிதையின் வெற்றி. உணர்த்த வந்த செய்தியை, ஓர் ஒப்பற்ற 'உத்தி' (Technique) யின்வழி இனிது உணர்த்துவதன்றோ ஒரு கவிதைக்கு வெற்றி எனப் படுவது! அதனைத் தங்கால் முடக்கொற்றனாரது தமிழ்ப்பாட்டுப் பெற்றுவிட்டது என்று கூறுவது மிகையாகாது.

பாட்டின் வடிவம் :

இவ்வழகிய கவிதையின் முழுவடிவம் பின்வருமாறு :

"அன்னாய் வாழிவேண் டன்னை நின்மகள்
பாலும் உண்ணாள் பழங்கண் கொண்டு
நனிபசந் தனளென வினவுதி அதன்திறம்
யானுந் தெற்றென உணரேன் மேனாள்
மலிபூஞ் சாரலென் தோழி மாரோடு
ஒலிசினை வேங்கை கொய்குவஞ் சென்றுழிப்
புலிபுலி யென்னும் பூசல் தோன்ற
ஒண்செங் கழுநீர்க் கண்போல் ஆயிதழ்
ஊசி போகிய சூழ்செய் மாலையன்
பக்கம் சேர்த்திய செச்சைக் கண்ணியன்
குயமண் டாகம் செஞ்சாந்து நீவி
வரிபுனை வில்லன் ஒருகணை தெரிந்துகொண்டு
யாதோ மற்றம் மாதிறம் படரென
வினவி நிற்றந் தோனே அவற்கண்(டு)
எம்முள் எம்முள் மெய்ம்மறை பொடுங்கி
நாணி நின்றனெ மாகப் பேணி
ஐவகை வகுத்த கூந்தல் ஆய்நுதல்
மையீ ரோதி மடவீர் நும்வாய்ப்
பொய்யும் உளவோ என்றனன் பையெனப்
பரிமுடுகு தவிர்த்த தேரன் எதிர்மறுத்து
நின்மகள் உண்கண் பன்மாண் நோக்கிச்
சென்றோன் மன்றவக் குன்றுகிழ வோனே
பகன்மா யந்திப் படுசுடர் அமையத்து
அவன்மறை தேஎம் நோக்கி மற்றிவன்
மகனே தோழி என்றனள்
அதனள வுண்டுகோள் மதிவல் லோர்க்கே."

—அகம் 48 (களிற்றியானை நிரை)

ஒப்பிடற் குரியது :

கொச்சி நியமங்கிழார் பாடும் பிறிதோர் அகப்பாட்டிலும் (52),

"வலந்த வள்ளி மரனோங்கு சாரற்
கிளர்ந்த வேங்கைச் சேணெடும் பொங்கர்ப்
பொன்னேர் புதுமலர் வேண்டிய குறமகள்
இன்னா விசைய பூசல் பயிற்றலின்"

என்ற வரிகளில், வேங்கைப் பூக்களைப் பறிக்கும் குறமகள் 'புலி புலி' என்று கூவும் இயல்பு வந்துள்ளது.

தங்கால் முடக் கொற்றனாரது படைப்பு சங்க இலக்கியத் தோழிக் கூற்றமைந்த பாட்டுக்களிற் குறிப்பிடத்தக்க ஒன்றாக இலங்குகின்றது.

———

அருள்மிகு வண்ணச்சரபம் தண்டபாணியடிகள் கடவுளரிடத்துத் தாம் கொண்ட உரிமையும் முறையும்

[தி. செ. முருகதாச அடிகள்]

எல்லாமாய், யாதொன்றிடத்தும் கலவாத — வல்லாண்மையுள்ள கடவுளை, சிற்றறிவுடைய உயிர்கள் வணங்கிப் பேறுபெறப் பலநெறி முறைகளை வகுத்துள்ளனர். அவை உயிர்களின் பக்குவ நிலைகட்கேற்பக் கைக்கொள்ள வேண்டி அமைத்த படி முறையேயன்றிக் கடவுள் வேறுவேறல்ல, ஒன்றே யென்பது ஆன்றோர் கண்ட முடிவு.

உலகியலில், ஒரு குடும்பத் தலைவன் ஒருவனை, மனைவி கணவனென்பாள், உடன் பிறந்தார், பெண்களாயின், அண்ணன் தம்பி யென்பர். ஆண்களாயினும் அப்படியே, மக்கள் தந்தை யென்பர். சம்பந்திகளாயின் மைத்துனர் மாமன் என்பார்கள். வேலையாட்கள் எசமானனென்பர். இன்னும் பட்டம் பதவியிலிருப்பார்களேயானால், முதல்வர்—அமைச்சர் போன்ற பல பெயர் கூறியழைப்பர். ஆனால், இவ்வளவுக்கும் உரியவன் ஒருவனேயாம். இதை யொட்டியே கடவுட் பெயரினும் இம் முறையை வகுத்தனர். வரலாறுகள் பின் இதற்கிசைய எழுந்தன. உயிர்கள் எவைக்கும் இறைவனொருவனே தலைவன். ஆண்மையில் வழிபடும்போது, எந்தையே, ஈசா எனவும், பெண்மையில் வழிபடும்போது, அன்னையே, அம்மையே எனவும் கூறி அழைத்துப் போற்றுகிறோம். 'அம்மையே அப்பா' என்ற திருவாசகம் போன்று பலவுண்டு.

இந் நிலையில் புராண வரலாற்றுப்படி சைவசமயக் கோட்பாட்டினர், சிவபெருமானுக்கு, உமையவள் மனைவி; கணபதி முருகன் என்பவர் புதல்வர்கள். உமையவள் திருமாலின் தங்கை. தங்கை கணவரான சிவன் மைத்துனர். அது போன்று, திருமாலுக்குரிய திருமகள், சிவனுடைய தங்கை தானே. இவர்கள் பெண் மக்களிருவர், அமுதவல்லி, சுந்தரவல்லி யென்பவர்கள். ஆண் மக்களிருவர், பிரமன், மன்மதனென்பவர்கள். எனவே முருகப்பெருமானுக்கு, அப் பெண் மக்களிருவரும் அம்மான் மகளாதலின், மனைவியராதற்குரியவர்கள். இவர்களிருவருமே வள்ளி தெய்வயானையாயினர் என்பது வெளிப்படை. பிரமன், மன்மதன் இருவரும் முருகனுக்கு மைத்துனராயினர். இந்த

இருவர் மனைவியரான கலைமகள் இரதி இருவரும் முருகன் தங்கையென்ற உரிமைக் குடையவர்களாயினர்.

சிவபிரானையும் உமையம்மையையும் சைவர்கள், தாய் தந்தையாக வழிபடுவதுபோல, முருகவழிபாட்டினர் முருகனைத் தந்தையாகவும், வள்ளி தெய்வயானையரைத் தாயாகவும் உரிமை பாராட்டிப் பணிவர். திருமால் வழிபாட்டினர், திருமாலைத் தந்தையாயும், இலக்குமிதேவியைத் தாயாகவும் போற்றுவர். திருமகளை வைணவ முறையில், தாயார் என்றே போற்றுவது காண்கிறோம். இப்படி அவரவரும் தங்கள் வழிபாட்டு முறையைக் கைக்கொள்வது இயல்பாகும்.

அருணகிரிநாத அடிகள் திருவருணையிலிருந்த சமயம் கூறியதாக ஒரு பாடல் :

''ஆத்தாள் குறத்தியென் அப்பன் குமரன் அரனெனக்குப்
பார்த்தா லொருமுறை பாட்டனு மாம்பதி னன்குலகும்
காத்தாளென் பாட்டிநற் காமனென் மாமன் கனவரையைப்
பேர்த்தாலும் பேர்க்கவொண் ணுப்பிள்ளை யாரென் பெரியப்பனே''

என்பது கவி. குறத்தி வள்ளிநாயகி தாய், குமரன் தந்தை, சிவன் ஒருமுறையிற் பாட்டன். (முருகன் தந்தையானதால்) பதினன்குலகமும் பெற்றுக் காக்கும் உமையவள் பாட்டி. மன்மதன் தாயுடன் பிறந்த மாமன். கணபதி பெரியப்பன் என்பது கருத்து. இதில், சிவனை, ஒருமுறை பாட்டன் என்றதால் மற்றுள்ள ஒரு முறை யாதென்ற ஐயமோ வினவோ எழலாம். ஆம்-தமக்கு உபதேசம் செய்தவன் முருகப்பிரான். தமக்கு முன்னே முருகனிடம் பிரணவப் பொருள் கேட்ட சிவன், சீட பரம்பரைப்படி அண்ணன் ஆகுமென்பதைக் குறிப்பால் உணர வைத்தனர்.

இந்த அருணகிரிநாதரது மறுபிறப்பான வண்ணச் சரபம் தண்டபாணி அடிகளும் இந்த முறையைக் கையாள்வாரானர். முருகப் பெருமானைப் பல பாடல்களாற் பாடுமிவர், கந்தப்பா-வேலப்பா-மயிலப்பா-குமரப்பா வென்று பாடுவதுபோல, வள்ளி நாயகியைப் பெற்ற நற்றுயாகவும், தெய்வயானையைச் செவிலித் தாயாகவும் பாராட்டுவர். திருவருள் நாட்டமென்ற நூலில்-வள்ளித் தாயே-தெய்வானைத் தாயாரே-என்பர்-கணபதியைப் பெரியப்பாவே என்கின்றனர். உமையைக் கவுரிப் பாட்டியே என்று பாடுகின்றனர். அருணகிரிநாதரைப் போலவே, திருப்புகழ் பல ஆயிரக் கணக்கிற் பாடினர். அவர் திருவருணைக் கோபுரமேலிருந்து முருகனருளை நாடிக் குதித்தார். முருகன்

காத்தனர். அது போல, தண்டபாணியடிகள், முருகனைக் கண் முன்னே காணவேண்டிப் பாண்டி நாட்டிலுள்ள திருமலையென்ற மலை முகட்டிலிருந்து உருண்டு உயிர்விட முயலுங்கால், கீழே விழுந்த உடல் ஊனமடையாமல் முருகப்பெருமான் காத்தனர். இப்படிப் பல தொடர்புடைய காரணத்தால் அருணகிரிநாதர் போல, முருகப்பெருமானையும், மற்றுள்ளவரையும் முறை வைத்துப் பாடியுள்ளனர்.

இனி முருகப்பெருமான் தந்தையானது போல, அவருடைய தந்தை முறையில் உள்ள கலைமகள் அத்தையாயினள். அருணகிரிநாதர் புராணம் பாடிய தண்டபாணி அடிகள் கலைமகள் வணக்கங் கூறிய பாடலில்,

> "பூமிசை யிருந்த போதன் புனிதநா வகத்தில் வாழும்
> மாமியே உனக்கு நூறு வந்தனம்"

என்று பாடினர்.

கொடுக்கூரிலுள்ள திருமாலைப் பாடிய அடிகள், அவணுள்ள அநுமாருக்குப் பாடிய பாட்டொன்றில், மாமா என்கின்றனர். எப்படி? முருகன் மைத்துனரான பிரமனும் மன்மதனும் அம்மானுகலாம். அநுமார் எப்படி மாமன்? சிந்தித்தறிய வேண்டியுள்ளது. திருமால் பதிசமாதலால், திருமால் தந்தை; திருமகள் தாய். தாய்க்கு அண்ணன் சிவன். திருமால் தங்கை உமையவளான போது, திருமகட்குச் சிவன் தமையன்றுனே? இருவரும் மைத்துனர்களன்றே. தாயான திருமகளின் அண்ணன் அம்மான். சரி, அநுமாரெப்படி எனில், அநுமார் சிவாமிசமாக அவதரித்தவரென்பது மரபு. அதன்படி அநுமார் தமக்கு மாமனென்று தண்டபாணியடிகள் கூறியது ஒரு புது முறை. இது வரை எவரும் கூருத-கொள்ளாத புதுமுறை-பொருத்தமானது.

இனி, தண்டபாணி அடிகளைப் பற்றி வளவனூர் மடத்துச் சண்முக சுவாமிகள் கூறுவதைக் காணலாம். பொதுநூல், சிறப்புநூல், திருவெண்பா-அருளாட்சி-விற்பனம் என்ற ஐந்து நூல்களை ஒரு தொடர்பாக, வெண்பாவினுல், நீதிகளைத் தொகுத்துப் பாடினர். பதித்து வெளியிடலானுர் தண்டபாணி அடிகள். அது சமயம், அந் நூல்கட்குச் சிறப்புக்கவி கூறவந்த சண்முக அடிகள், இரு வெண்பாக்களைக் கூறினர்.

முருகனுக்குச்சத்தியான வள்ளியம்மையைத் தாய்முறையிற் போற்றுபவர் தண்டபாணியடிகள். வள்ளியம்மை ஆதி-பகவன்-என்பவர் மகளாகப் பிறந்த வரலாறென்றுண்டு. வள்ளியம்மையுடன் திருவள்ளுவரும் ஏழு பேரிலொருவர். எனவே வள்ளியம்மையின் தம்பியாகக் கடைசியிற் பிறந்தவர் திருவள்ளுவர்.

எனவே இவருக்குத் தாய் மாமனுயினர். மாமன் பெண் தருதல் வேண்டும். திருக்குறள் என்ற பெண்ணைப் பெற்றுக் கொடுத்தார். அதனுடன் உள்ளம் ஒன்றிய தண்டபாணி அடிகட்கு மனையாகக் கொள்ள இட மேற்பட்டது. இதன் விளைவாக இந்த நூல்களைப் பெற்றுக் கொடுத்தார் என்பது ஒரு கவிப் பொருள்.

மற்ருென்று, தண்டபாணி அடிகள் துறவு நிலையினர். இப்படியானதன் காரணம் யாதென்றெண்ணிய சண்முக அடிகட்கு, ஓர் எண்ண முதயமாயிற்று. ஐந்து பெண் பெற்றவர் அரசனுயினும் ஆண்டியாவார் என்பது உலகப் பழமொழி. அதற்கிசைய, ஐந்து நன்னூற் பாவையரைப் பெற்ற இவர் ஆண்டியானுர் என்பது நகைச்சுவை கலந்த இனிமையான கருத்து. இதனுல் தனக்கென்ன பயனென்ன என்பதையும் கூறத் தவறினுரில்லை சண்முக அடிகள். இதைவிடச் சுவையானது இனி அவர் கொண்ட கருத்து.

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் காலத்தால் முந்தியது; பழைமையானது. அதே கருத்தில் வைத்து இந்த நூல்கள் ஐந்தும் புதுமைப் பொலிவுடன் திகழ்கின்றன. இது "தாயைப் போலப் பிள்ளை" என்பதை ஒத்திருப்பதால், இந் நூல்கள்மீது என் உள்ளம் அவாவியது என்ற கற்பனைத் திறன் பாராட்டத் தக்கது. இனிக் கவியினைக் காண்க:

> "வள்ளுவனுர் தம்மருகன் வள்ளிதரும் மாண்புதல்வன்
> கொள்ளுமுறை யாற்குறளைக் கூடியே—தெள்ளுதமிழ்ப்
> பாண்டியினில் ஐந்துநன்னூற் பாவையரைப் பெற்றதனுல்
> ஆண்டியுரு வாய்த்திகழ்கின் ருன்"

என்பது முறையையும், தவக்கோலத்தின் சிறப்பையும் கூறியதாகும். அடுத்தது தம் விருப்பத்தைக் கூறிச் சிறப்பித்ததாகவுள்ளது.

> "வேய்கிளர்தோள் மெல்விரலார் மெய்ப்பருவம் எய்துங்கால்
> தாய்கிழவி யாதல் சரதமால்—ஆய்குறட்பெண்
> ஆன்றதண்ட பாணியைச்சேர்ந்(து) ஐந்துபெற்ருள் ஆதலினுல்;
> யான்றழைக்கு மோகமெய்தி னேன்"

என்பதன் வாயிலாக அறிகிருேம். இப்படிப் பல சுவையான நிகழ்ச்சிகள், தண்டபாணியடிகள் வரலாற்றில் உண்டு. தாமியற்றிய, "மநுநெறித் திருநூ"லென்பதில் இந் நூற்குத் துணையாயும் முதலாயுமிருப்பது திருக்குறளே யென்று கூறுவதைக் காணலாம்.

''இப்பார் உலகறிய ஏழெழுவர் தம்மைவென்ருேன்
மூப்பால்வெண் பாட்டே முதல்''

என்பதாகும்.

இந் நூல், நூற்றுமுப்பது அதிகாரமுடையது. திருக்குறளுக்கு மேற்படவும், சமமாயும் கூறலாகாதென்ற பண்பாட்டுடன், மூன்றதிகாரம் குறைத்துக்கூறினர். இந் நூலியற்றும்படி முன்கூறிய சண்முக அடிகள் கூறியதை ஒப்பி, சோழவந்தானூர் கந்தசாமி அடிகளும் வழிமொழிந்தாரென்று கூறியுள்ளனர் அடிகள்.

''எண்முகத்தாய்ந் தோதென் றிசைத்தான் குமாரபுரிச்
சண்முகப்பேர் வண்மைத் தவன்''

எனவும்,

''வருக்கக் குறட்குரைசெய் வாய்த்தவசி தானும்
தருக்கமிடா தாமாமென் ருன்''

எனவும் வருபவற்ருலறிக.

'வருக்கக் குறள்' என்பது தமிழ் மொழியில் முதலில் வாராத அக்கரங்களையும், உயிரொடு புணர்த்தி எல்லா அக்கரங்கட்குமாக, இயற்றிய நூல். அதற்கு உரை வகுத்தவர், சோழவந்தானூர் கந்தசாமி அடிகளாவர். எதைப் பாட எண்ணினும் எளிதாயும், இனிமையாயும், தடையின்றிப் பாடுமியல்பினர் வண்ணச்சரபம் தண்டபாணியடிகள். இவர் பாடிய பாடல்கள் ஐம்பதாயிரம் வரை, ஏட்டுச் சுவடிகளில் அவராலேயே எழுதப்பட்டவை, ஐம்பது வரை பாதுகாக்கப் பெற்றுள்ளன.

கடவுள்

சொற்பதம் கடந்த அப்பன்
தாளதா மறைகள் ஏத்தித்
தடமலர் புனைந்து நையும்,
ஆளலா தவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே.

மாணிக்கவாசகர்

ஆப்பிரிக்காவில் 'தனிப்பிரஞ்சு' இயக்கம்

[டாக்டர் க. ப. அறவாணன், செனகல்]

ஒரு மொழி வளர்ச்சிக்குப் பிறமொழிச் சொற்கள் இன்றியமையாதவைதாம். ஆனால் அவை அதிகமாகக் கையாளப் பெற்றால் மொழியின் தூய்மை கெட்டுவிடும். அதைவிட அம் மொழியின் இயல்பான சொற்கள் வழக்கிழந்து போகும். எனவே தான் அவ்வப்போது ஒவ்வொரு மொழியிலும் 'தனித்தாய்மொழி இயக்கம்' ஏற்படுகிறது.

தமிழ் மொழியின் தூய்மைக்குத் 'தனித்தமிழ் இயக்கம்' கண்டவர் மறைமலையடிகள். அவ்வாறே 'அச்ச தெலுகு' (தனித் தெலுங்கு) இயக்கம் நடந்தது.

மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள செனகல் நாட்டின் ஆட்சி மொழி பிரெஞ்சு. அதில் ஆங்கில, அமெரிக்கச் சொற்கள் அளவுக்கு மேல் புகுந்துள்ளன. அவற்றை அகற்றி விட்டுத் தனிப்பிரஞ்சு இயக்கம் அரசுத் துணையுடன் நடக்கிறது. அரசு அத்தகைய சொற்களைக் களைந்துவிடும்படி ஆணை பிறப்பித்துள்ளது. பள்ளியிலோ கல்லூரியிலோ கலப்புச் சொற்களைக் கையாளுதல் கூடாது என்று கல்வி அமைச்சகம் ஆணையிட்டிருக்கிறது. அண்மையில் போர்ப்படைத் துறைகளிலும் வேற்று மொழிச் சொற்களைக் களைக எனக் காப்பு அமைச்சகம் வற்புறுத்தி வேற்றுமொழிக்கு இணையாகத் தனிப் பிரெஞ்சு சொற்களைத் தந்துள்ளன.

அவை வருமாறு :

1- Jet>arion de reaction
2. Turbofan>reacteur a double flux
3. Water proof>imperme abilisation
4. Jumboget>grosporteur
5. Cock pit>habitache.

இவ்வாறு பெரிய பட்டியலையே அது வெளியிட்டுள்ளது.

———

செய்திகளும் குறிப்புகளும்

பல்கலைக் கழகச் சிறப்புச் சொற்பொழிவு

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையின் சார்பில் 23—2—77 இல் பல்கலைக் கழகக் கட்டிடத்தில், திரு மு. வை. அரவிந்தன் அவர்கள் "தமிழர் இலக்கியக் கொள்கையும் திறனாய்வு முறையும்" என்னும் பொருள் பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

நூலாசிரியர் அறுவருக்குக் குழந்தை எழுத்தாளர் சங்கப் பாராட்டு விழா

அண்மையில் தமிழ்நாடு கல்வித்துறையினரின் குழந்தை இலக்கியப் பரிசுகளைப் பெற்ற திருவாளர்கள் என். கே. வேலன், மா. சண்முக சுப்பிரமணியம், தணிகை உலகநாதன், பூவண்ணன், மு. வை. அரவிந்தன், அ. அப்துல் கரீம் ஆகிய நூலாசிரியர் அறுவருக்குப் பாராட்டு விழா, 25-2—77 இல் சென்னை மாவட்ட மத்திய நூலக அரங்கில் திரு. ம. ப. பெரியசாமித் தூரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அறிஞர் பலர் நூலாசிரியர்களின் குழந்தை இலக்கியப் பணியினைப் பாராட்டிப் பேசினர்.

பேராசிரியர் கா. நமச்சிவாயர் நினைவுச் சொற்பொழிவுகள்

சென்னைத் திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரியின் சார்பில், இவ்வாண்டு புலவர் பட்டப்படிப்புத் தேர்வுக்குச் செல்லும் மாணவர்களுக்கு முக்கிய பாடப்பகுதிகளுக்கு விளக்கம் தரும் நோக்கத்துடன் சென்னை மாநிலக் கல்லூரியில் 28—2—77 முதல் 9—3—77 முடியப் பேராசிரியர் கா. நமச்சிவாயர் நினைவுச் சொற்பொழிவுகள் என்ற பெயரில் பேராசிரியர்களும் தமிழறிஞர்களும் பல்வேறு பொருள்கள் பற்றி அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

கலைக்களஞ்சியம் பற்றிய ஆய்வுக் கூட்டம்

தமிழில் இக் கால அறிவியல், பொருளியல், வரலாறு ஆகியவற்றின் வளர்ச்சி கருதிப் பொருளாதாரம், அறிவியல் அரசியல் ஆகிய துறைகளில் வல்ல ஆசிரியர்களைக் கொண்டு கலைக்களஞ்சியம் ஒன்றனைத் தயாரிப்பதென முடிவுசெய்து அது பற்றிப் பேசத் தமிழ் மாநிலத் திட்டக் குழுவினர் 28-2-77 இல் எழிலகத்தில் உள்ள திட்டக் குழுவின் சொற்பொழிவு மண்டபத்தில் ஓர் ஆய்வுக் கூட்டம் நடத்தினர். இக்கூட்டத்திற்குக் கல்வித்துறை. வணிகத்துறை, பதிப்புத் துறை ஆகியனவற்றைச் சார்ந்தபெருமக்கள் சிலர் வந்திருந்தனர்.

சோவியத் நூலகங்களில் 370 கோடி புத்தகங்கள்

மக்களின் அறிவு வளர்ச்சிக்குத் துணைபுரியும் நிலையங்களுள் நூல் நிலையங்கள் முதன்மையானவை. சோவியத் நாட்டில் 3 நூறாயிரத்து 61 ஆயிரம் நூலகங்கள் உள்ளன. இந்த நூலகங்களில் மொத்தம் 370

கோடி புத்தகங்கள் உள்ளன. ஆண்டுதோறும் 18 கோடிக்கு மேற்பட்ட மக்கள் இந் நூலகங்களில் உள்ள நூல்களைப் படித்துப் பயன் அடைகிறார்களாம்.

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் குருபூசைத் திருவிழா

4—3—77 அன்று பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் குருபூசை விழாவும் சன்மார்க்க சங்கத்தின் 61 ஆவது ஆண்டு விழாவும் யோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அருளுரை வழங்கினுர்கள். அடுத்து 5, 6—3—77 ஆம் நாள்களில் இவ் விழாவினையொட்டிக் கல்வி நிலையங்களின் ஆண்டு விழாக்களும் நடைபெற்றன. கோவை நகர அனைத்துக் கல்லூரி மாணவர் திருக்குறள் சொற்பொழிவுப் போட்டியும் நடைபெற்றது. அறிஞர் பலர் பல அரிய பொருள்கள் பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

'பொன்னியின் புதல்வன்' புத்தக வெளியீட்டு விழா

5—3—77 இல் மயிலை இராசேசுவரி திருமண மண்டபத்தில் திரு. சுந்தர் எழுதிய 'பொன்னியின் புதல்வன்' என்னும் 'கல்கி' யின் வரலாற்றைக் கூறும் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. ஆளுநரின் கருத்துரைஞர் உயர்திரு. வி. கார்த்திகேயன் I.A.S., அவர்கள் தலைமை தாங்கினுர். உயர்நீதி மன்ற முன்னுள் நடுவர் உயர்திரு எஸ். மகராசன் அவர்கள் நூலை வெளியிடத் திரு. தி. சதாசிவம் அதனைப் பெற்றுர். அறிஞர்கள் பலர் பாராட்டுரை வழங்கினர்.

மறைமலையடிகளார் நூற்றுண்டு விழா

திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் 6—3—77 இல் மறைமலையடிகளார் நூற்றுண்டு விழா சிறப்புற நடைபெற்றது. உயர்திரு. தி. மு. நாராயணசாமி பிள்ளை அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினர். அறிஞர் பலர் அடிகளார் மாண்பு பற்றி உரையாற்றினர்.

திருவாட்டி கி. இலக்குமி பாரதி அம்மையார் பிரிவு

பெருமதிப்பிற்குரிய நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களின் திருமகளாரும், திரு. கிருட்டிணசாமி பாரதியாரின் இன்னுயிர்த் துணைவியாரும், தமிழ்நாடு கல்வித்துறை இணைச் செயலர் உயர்திரு. இலக்குமிகாந்தன் பாரதியார் ஐ. ஏ. எஸ்., திரு. மேஜர் காந்திமோகன் பாரதியார் ஆகியோரின் தவத் தாயாருமாகிய திருவாட்டி இலக்குமி பாரதி அம்மையார் 1-3-1977ல் அவர்தம் சிற்றூரான தென்காசிக்கு அருகில் உள்ள நயினுர் அகரத்தில் இறையடி சேர்ந்த செய்தியறிந்து ஆற்றெணுத்துயர் அடைந்தோம். அம்மையார் அவர்கள் கழக ஆட்சியாளரிடம் நெடுகலும் மிக்க அன்பு காட்டிவந்ததோடு, தம் தவத் தந்தையாரின் ஆசிரியரான மறைமலையடிகளார் பெயரில் உள்ள நூல் நிலையத்தைத் தம் மனத்திற்கினிய கணவரொடு வந்து பார்த்துப் பெருமகிழ்ச்சியுற்றுப் பாராட்டு வழங்கினுர்.

அவர்கள் நாட்டு விடுதலையின் பொருட்டு மும்முறை சிறை சென்றுள்ளனர். தம் கணவரோடு ஒரே காலத்தில் தமிழ்நாடு சட்ட மன்றத்தில் உறுப்பினராய் அமர்ந்து வரலாற்றுப் புகழ்படைத்தவர்கள். அம்மையாரின் ஆருயிர், அம்மை அம்பவலாணர்தம் பொன்னடியில் அமர்ந்து இன்புறுகவென வணங்கி வேண்டுகின்றோம்.

———

மதிப்புரை

மறைமலையடிகள் பிள்ளைத்தமிழ்

[ஆசிரியர்: அரு. சோமசுந்தரன், எம்.ஏ., பி.டி., வெளியீடு: பொன்முடி பதிப்பகம், 123, முத்துப்பட்டணம், மூன்றும் தெரு, காரைக்குடி, இராமநாதபுர மாவட்டம். விலை: ரூ 4-00]

மறைத்திரு மறைமலையடிகளாரின் நூற்றாண்டு விழா நினைவாக இப் பிள்ளைத் தமிழைப் பாடியுள்ளார் இந் நூலாசிரியர். ஆங்காங்கே பல வடசொற்கள் விரவி வந்தபோதிலும் பிள்ளைத்தமிழ் இலக்கணங்கள் அனைத்தும் பொருந்த இனிய எளிய செய்யுள் நடையில் மறைமலையடிகளார் மாண்புகள் அனைத்தும் எடுத்துரைக்கப் படுகின்றன. தேவையான குறிப்புரைகள் தரப்பட்டுள்ளன. நூலாசிரியரின் முயற்சி பாராட்டத் தக்கது.

தமிழும் தத்துவமும்

[ஆசிரியர்: டாக்டர் சோ. ந. கந்தசாமி, M.A., M.Lit., PhD. வெளியீடு: மணிவாசகர் நூலகம், சிதம்பரம். விலை: ரூ. 12-50]

தமிழ்மொழியின் சிறப்பை அறிஞர் பலர் பல கோணங்களில் எடுத்துரைத்துள்ளனர். ஆனால், மெய்ப்பொருட் கருத்துகளை உணர்த்தும் தமிழின் ஆற்றலை விரிவாக எடுத்துரைக்கும் நூல் இஃதொன்றே எனில் அது மிகையன்று. சமய நூல்கள் பலவற்றை ஆராய்ந்து தக்க மேற்கோள்களுடன் எடுத்துரைக்கும் ஆசிரியரின் மெய்ப்பொருள் ஆராய்ச்சி பாராட்டத் தக்கது.

ஆய்வு நோக்கில் நாட்டுப்புற மருத்துவம்

[ஆசிரியர்: க. வெங்கடேசன், எம்.ஏ., வெளியீடு: சித்தர் கோட்டம், 7, அருளாம்பாள் தெரு, தி. நகர், சென்னை-600017 விலை: ரூ. 7-00]

நாட்டுப்புற மருத்துவம் என நம்மனோர் மிக எளிமையாகக் கருதும் தமிழ் மருத்துவம் சித்தர்களால் கண்டு பிடிக்கப்பட்ட அரிய மருத்துவக் கலையாகும். இக் கலை தமிழ் இலக்கியங்களுள் ஒரு பகுதியாகவும் திகழ்கிறது. போதிய ஆராய்ச்சியும் ஆதரவும் இன்மையால் இம் மருத்துவம் யாண்டும் பரவாமலிருக்கிறது. இத்தகைய நாட்டுப்புற மருத்துவத்தை ஆய்வு நோக்கில் காணும்போதுதான் அதன் பலன்கள் தெரிகின்றன. படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய செய்திகள் பல உள.

Silambam Fencing from India (இந்தியாவின் சிலம்பக்கலை)

[ஆசிரியர்: ஜே. டேவிட் மான்யுவெல் ராஜ், M.A., D.P.E., M.P.E. கிடைக்குமிடம்: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட். 1/140, பிரகாசம் சாலை, சென்னை-1. விலை: ரூ. 15/-]

கலைக் கல்வியோடு சிலம்பக் கலையிலும் தேர்ச்சி பெற்றுள்ள இந் நூலாசிரியர் இந்தியாவின் சிலம்பக்கலையினைப் பாரறியச் செய்யக் கருதி அக் கலை பற்றிய அரிய இந் நூலை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். சிலம்பக் கலையின் வரலாறு - பண்டைக்கால இக் கால சிலம்ப முறைகள் ஆகியவற்றைப் படங்களுடன் விளக்குகிறார். இக் கலையில் இவர் பெற்றுள்ள புகழ் உலகளாவிய புகழ் என்பது இந் நூலைப் படிப்போர் புரிந்து கொள்ளலாம். சிலம்பம் போன்ற பண்டைய போர்முறைகள் அழியாதிருக்க இவர் மேற்கொண்டுள்ள முயற்சிகள் பெரிதும் பாராட்டற்குரியவை.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 2/140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.

ஆசிரியர்: வ. சுப்பையா.

செந்தமிழ்ச் செல்வி பற்றிய உரிமை விளக்கம்-1956 ஆம் ஆண்டுச் சட்டம் - விதி 8 - படிவம் 4 இல் கண்டுள்ளபடி

---

1. வெளியிடும் இடம் : 1/140, பிரகாசம்சாலை, சென்னை-1
2. வெளியீட்டு முறை : திங்களிதழ்
3. அச்சிடுவோர் பெயர் : அப்பர் அச்சகம்
   இனம் : இந்தியர்
   முகவரி : 2/140, பிரகாசம்சாலை, சென்னை-1.
4. வெளியீட்டாளர் பெயர் : திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிட்டெட்
   இனம் : இந்தியர்
   முகவரி : 1/140, பிரகாசம்சாலை, சென்னை-1
5. ஆசிரியர் பெயர் : திரு. வ. சுப்பையாபிள்ளை
   இனம் : இந்தியர்
   முகவரி : 1/140, பிரகாசம்சாலை, சென்னை-1
6. இதழ் உரிமையாளர்கள், மூலதனத்தில் நூற்றுக்கு ஒரு விழுக்காட்டிற்கு மேற்பட்ட பங்குடைய பங்காளிகள் ஆகியோரின் பெயர்களும் முகவரிகளும் :

1. திரு. T. S. இராமலிங்கம் பிள்ளை, M. A., B. L.
   ஓய்வு பெற்ற சட்டத்துறைச் செயலாளர்,
   7, லேடி தேசிகாச்சாரி சாலை, ஆழ்வார்பேட்டை,
   மயிலாப்பூர், சென்னை-4.
2. திரு. வ. சுப்பையா பிள்ளை
   6, பவழக்காரத் தெரு, சென்னை-1.
3. திருமதி சு. மங்கையர்க்கரசி
   6, பவழக்காரத் தெரு, சென்னை-1.
4. திரு. R. M. S. கோபாலகிருஷ்ண பிள்ளை
   வணிகர், சாத்தான்குளம்,
   (திருநெல்வேலி மாவட்டம்)
5. திரு. M. K. சிவகாமிநாத பிள்ளை
   நான்காவது மாடி, புரோச் கட்டிடம்
   பிரின்செஸ் தெரு, பம்பாய்-2.
6. திரு. N. S. சுந்தரம், பார்-அட்-லா,
   134, தெற்கு இராச வீதி, தூத்துக்குடி.
7. திரு. மு. காசிவிசுவநாதன் செட்டியார்
   வங்கியார், பாகனேரி, (இராமநாதபுரம் மாவட்டம்)

8 திருமதி கா. லட்சுமி ஆச்சி
(திரு. காசிவிசுவநாதன் செட்டியார் மனைவி)
பாகனேரி.

9. திரு. பெரி. அழ. மு. நா. நாராயணன் செட்டியார்
உரிமையாளர், பாரி அச்சகம், 127, பிரகாசம் சாலை, சென்னை-1

10. திரு. மு. ஆறுமுகம்
15. பெருமாள் வடக்கு மாடத்தெரு,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி-2.

11. திருமதி க. வடிவழகி
(திரு. இரா. கலியாணசுந்தரம் மனைவி)
3, மேட்டுத் தெரு, சென்னை-1.

12. திருமதி. மு. வயிரமணி
(திரு. இரா. முத்துக்குமாரசாமி மனைவி)
3, மேட்டுத் தெரு, சென்னை-1.

13. திருமதி பழ. மீனாட்சி ஆச்சி
(திரு. S. M. பழனியப்ப செட்டியார் மனைவி)
11, ரட்லண்ட் கேட், 2-வது தெரு,
சென்னை-6.

14. திரு. S Ct. சிதம்பரம் செட்டியார்
162, அவினாசிசாலை, கோயமுத்தூர்-1.

15. திரு. A. Kn. அருணாசலம்
(திரு. கண்ணப்பசெட்டியார்புதல்வர் நாயனார்குளத்தெரு
நாட்டரசன் கோட்டை, (இராமநாதபுரம் மாவட்டம்)

16. திரு. T. S. ஜம்புலிங்கம் செட்டியார்
திருப்பூர் இல்லம், கோயமுத்தூர்.

17. திரு. Rm. K. Rm இராமசாமி செட்டியார், வங்கியார்,
திட்டை, (தஞ்சை மாவட்டம்)

18. திரு. இரா. கலியாணசுந்தரம், பி. எஸ்ஸி.
3, மேட்டுத்தெரு, சென்னை-1.

19. திரு. இரா, முத்துக்குமாரசாமி, எம்.ஏ.,பி.லிப்
3, மேட்டுத்தெரு, சென்னை-1.

மேலே தரப்பட்டுள்ள விளக்கங்கள் அனைத்தும் எனது முழு நம்பிக்கைக்கும் அறிவுக்கும் ஏற்ப உண்மையானவை என வ. சுப்பையா பிள்ளையாகிய யான் உறுதியளிக்கிறேன்.

10—3—1977

(ஒப்பம்) வ. சுப்பையாபிள்ளை

பதிப்பாளர்

கழகப் புதிய வெளியீடுகள்

கந்தர் சட்டி கவசம்—குறிப்புரையுடன்

முருகன் அருள் பெற விரும்புவோர் அன்றுடம் ஓதத்தக்க கந்தர் சட்டி கவசத்திற்குச் சிறந்த குறிப்புரை சேர்க்கப்பட்டுள்ளது. அன்பர்கட்கு இது பெரிதும் பயன்படும் ரூ. 0 60

மறைமலையடிகளார் வரலாற்று மாட்சி

ஆசிரியர்: *சிவத்திரு. அழகரடிகள்.*

மறைத்திரு மறைமலையடிகளாரின் மாணவராகிய அழகரடிகள் எழுதியுள்ள இவ் வரலாற்று நூல் மறைமலையடிகளாரின் பல்துறை அறிவாற்றல்களையும், பேச்சுத்திறன்—ஆராய்ச்சித்திறன்—அவர்தம் உளப்பாங்கு இன்னபிறவற்றையும் செம்மையாக எடுத்துக்காட்டுகிறது. ரூ. 10 00

திருக்குறள் நாடகம் (காமத்துப்பால்)

ஆசிரியர்: *மயிலை சீனி கோவிந்தராசனார்.*

திருக்குறள் காமத்துப்பால் இந்நூலின்கண் சிறந்ததொரு இலக்கிய நாடகமாக எழுதப்பட்டுள்ளது. அகத்துறை இலக்கணங்கள் அனைத்தும் பொருந்தப் படிப்பார்க்கு இன்பமூட்டும் வகையில் அமைந்துள்ளது. ரூ. 6 75

கித்தேரியம்மாள் அம்மானை—ஆசிரியர்: *வீரமாமுனிவர்.*

குறிப்புரை: புலவர் இறைக்குருவனார்.

இது கித்தேரி அம்மாள் என்னும் கிறித்தவ சமய அருள் நங்கையின் வரலாறு. இதனை வீரமா முனிவர் சிறந்த செய்யுள் நடையில் காவியமாக இயற்றியுள்ளார். இவ் விலக்கியம் பல்கலைக்கழக மாணவர்க்குப் பாடமாக வைக்கப்பட்டுள்ளதால், அவர்கட்குப் பயன்படும் வகையில் குறிப்புரை எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது. திருச்சி தூய சோசப்பு கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ரம்போலா மாஸ்கரேனஸ் அவர்களின் அணிந்துரையுடன் கூடிய பதிப்பு. ரூ. 6 75

திருமுருகாற்றுப்படை—உரைநடையும் குறிப்பும்

ஆசிரியர்: புலவர் இரா. இளங்குமரன்

நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படை சிறந்த சங்க இலக்கியமாகவும், சமய இலக்கியமாகவும் திகழ்கிறது. இதற்குப் புதிய முறையில் உரைநடையும், குறிப்புரையும் எழுதியுள்ளார் இவ்வுரையாசிரியர். ரூ. 1 25

திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா

உரை நடையும் குறிப்பும்

ஆசிரியர்: புலவர் இரா. இளங்குமரன் ரூ. 1 25

திருக்குறள் தாலாட்டு (அச்சில்)

பதிவு எண் : M. 4899

பிற பதிப்பாளரின் புதிய வெளியீடுகள்

இலக்கியம்

இலக்கியத் திறனாய்வு—சு. பாலச்சந்திரன்	12	00
அரிஸ்டாடிலின் கவிதை இயல்—அ. சு. மணவாளன்	9	00
தமிழும் தத்துவமும்—டாக்டர் சொ. ந. கந்தசாமி	12	50
படைப்பிலக்கியம்—ரா. பிச்சுமுத்து	4	50
தமிழ்க் கவிதைகள்—தொகுப்பு: சாலை இளந்திரையன்	2	50
கண்ணதாசன் காவியங்கள் ஒரு திறனாய்வு —ஆ. செகநாதன்	2	50
தொல்காப்பியருக்குப் பின் தமிழில் காவியங்கள் —மு. மாணிக்கம்	5	00
கவிதை நயம்—முருகையன்	5	00
இலக்கிய நெஞ்சம்—மு. பி. பாலசுப்பிரமணியன்	4	00
குறளமுதம்—கண்மதி	6	00

வரலாறு

சபரிமலை ஐயப்பன்—முத்துப் பிள்ளை	2	00
பாரதி ஒரு வாழ்நெறி—தி. சா. ராஜு	9	00
நான் காண விரும்பும் இந்தியா—சி. சுப்பிரமணியம்	3	90
பொன்னியின் புதல்வர்—சுந்தா	30	00
சங்க காலத்திற்கு முன்—மா. ரா. போ. குருசாமி	5	00

கட்டுரை

தன்னம்பிக்கை தரும் வெற்றி—பி. சி. கணேசன்	3	50
துறைமுகம்—சுரதா	6	00

பல்வகை

சி. எஸ். ஒரு கண்ணோட்டம்—மணியன்	7	50
பாலிமரக் காட்டினிலே—அகிலன்	6	75
குடும்பம் ஒரு கோயில்—பி. சி. கணேசன்	3	50
ஆய்வு நோக்கில் நாட்டுப்புற மருத்துவம் —க. வேங்கடேசன்	7	00
ஆய்வியல் அறிமுகம்—தமிழண்ணல்	15	00
சொர்க்கத்துக்கு ஒரு குறுக்குவழி-இந்திராபார்த்தசாரதி	5	50
வண்ணங்கள்—கரு. திருவரசு	2	50
உடைந்த உள்ளம்—சரத்சந்திரன்	6	00
அவள் ஒரு இந்துப்பெண்—கண்ணதாசன்	1	50
தமிழ்த் திரை உலகில் துருவமீன்—தமிழ்ப்பித்தன்	2	50
முற்றுகை—டாக்டர் கோரா	4	00
எண் கணிதமும் கைரேகையும்—V. P. தியாகமூர்த்தி	14	00
Silambam Fencing from India —J. David Manuel Raj, M.A., D.P.E., M.P.E.	15	00
Manikkavachakar—C. Vanmikanathan	2	50

அப்பர் அச்சகம், சென்னை-1.